பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 11 வியாழக்கிழமை 25.06.2020 கதிர் 232

**இது ரகசியம் அல்ல!**

'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு எண்டானாம்' - என்றொரு பேச்சு மொழி வழக்கு நம் மத்தியில் உண்டு.

ஏதோ ஒன்றைக் கேட்க வேறு ஒன்றைப்பதில்கூறிவிட்டுப்போகும் இயல்பை பக்கம் 02 »

# தமிழர் தாயகத்தில் கோட்டாபயவின் 20,000 உளவாளிகள்!

## மாவை பரபரப்புத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழர் தாயகத்தில் 20 ஆயிரம் உளவாளிகளை நடமாட விட்டுள்ளார் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கோட்டாபய இந்த நாட்டில் இராணுவ ஆட்சி ஒன்றை நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனவும், அவ்வாறான நிலைமைகள் இருக்கின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மாவை இவ்வாறு குறிப்பிட்டார். பக்கம் 02 »




## டக்ளஸின் கூட்டத்துக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் .25

கிளிநொச்சி இ.போ.சபை அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேர்தல் பரப்புரை பக்கம் 02 »

## சம்பிக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரம்!

கொழும்பு, ஜூன் 25

கடந்த 2016ஆம் ஆண்டு இராஜகிரியவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க பக்கம் 02 »

## அல்லாரையில் வாள்வெட்டு; வர்த்தகர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

கொடிகாமம், அல்லாரைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பக்கம் 02 »

## 7 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தேர்தலின் பின் நியமனம்

கொழும்பு, ஜூன் 25

பொதுத் தேர்தலின் பின்னர் 7 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கஉள்ளதாககல்விஅமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பக்கம் 02 »

## பிரிந்தவர்களையும் இணைத்து தேர்தலின் பின் புது அவதாரம்!

### தமிழரசுத் தலைமை திட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 25

துரதிஷ்டவசமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியிருப்பது எனக்கு மிகுந்த கவலை. தேர்தல் முடிந்த பின்னர் அவர்களையும் இணைத்து இந்த நெருக்கடியான காலகட்டத்தில், அடுத்த கட்டத்துக்கு நகர வேண்டும்.

-இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் ஒரு கட்சியின் தலைவராக பக்கம் 02 »

## ஆலோசனைகள் புறக்கணிப்பு கொரோனா பரவும் பேராபத்து

கொழும்பு, ஜூன் 25

கொரோனா அச்சுறுத்தலை அடுத்து நாட்டில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் பொதுப் போக்குவரத்து சேவை மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வரும் மக்களின் செயற்பாடு வருத்தமளிப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மிகவும் வருத்தத்துடன் கருத்து வெளியிட்ட அவர், பலர் சுகாதார வழிமுறைகளுக்கு அமைய செயற்படுவதில்லை பக்கம் 02 »

## தமிழரின் ஒரே தெரிவு தமிழ்க் கூட்டமைப்பே!

### எம்மை விமர்சித்துத் திரிபவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டுவர் என சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 25

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஒரே தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அதை இந்தத் தடவையும் எமது மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள். கூட்டமைப்பை விமர்சித்துக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் எமது மக்கள் தக்க பாடம் புகட்டியே தீருவார்கள். ஏனெனில் அந்தக் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காக அரசின் ஆதரவுடன் திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டவையாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். பக்கம் 02 »

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஹரீனைக் கைது செய்யுங்கள்!

### அரசிடம் விஜயதாஸ வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 25

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவைக் கைது செய்ய வேண்டும் என்று அரசிடம் முன்னாள் அமைச்சர் விஜயதாஸ பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இப்படித்தான் கூறுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் காலையில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் கூறிய பதில் பற்றிய செய்தியைப் படித்த போது இந்தப் பேச்சு மொழிதான் எனக்கு நினைவுக்கு வந்தது.

அங்கு செய்தியாளர்கள் கேட்ட கேள்வி என்ன, நீதியரசர் கூறிய பதில் என்ன என்பவை எல்லாம் எனக்கு சத்தியமாகச் சரியாகத் தெரியாது. அந்த விடயத்தில் நான் வெறும் கேள்விச் செவியன்தான் என்பதை முதலில் கூறி வைக்க விரும்புகிறேன்.

ஆகையினால் என் மனதில் பட்டதை மட்டுமே நான் எழுதுகிறேன்.

பிரபாகரனை 'அண்ணன் பிரகாரன்' என்றோ 'தம்பி பிரபாகரன்' என்றோ அழைப்பது வயதைப் பொறுத்தவிடயம். அதில் நீதியரசர் விக்னேஸ்வரனோ, நானோ பேசுவதற்கு ஏதுமில்லை.

அவர் வயதில் மூத்தவர். எனவே 'தம்பி பிரபாகரன்' என்றே அழைக்கலாம். நான் வயதில் சிறியவன். எனவே 'அண்ணன் பிரபாகரன்' என்றே அழைக்கலாம். அதுவல்ல விடயம். விவகாரம் அதற்கு அப்பாலும் உண்டு.

மஹிந்த ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் அண்ணன் தம்பியர்தான். மஹிந்த ராஜபக்ஷதான் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினார்.

வீட்டில் அவர்கள் அண்ணன் தம்பி உறவுதான். இவர் அவரை 'மஹிந்த ஐயே' ('மஹிந்த அண்ணா') என்றோ, அவர் இவரை 'மல்லி கோட்டா' (தம்பி கோட்டா) என்றோ அழைக்கலாம்.

ஆனால், நாட்டிற்கு முன்னால் அவர் இவரை 'மேன்மை தங்கிய ஜனாதிபதி' என்றும், இவர் அவரை 'கௌரவ பிரதமர்' என்றும்தான் அழைக்க முடியும். அழைக்க வேண்டும்.

அது போன்ற ஒரு விடயம்தான் நான் சுட்டிக்காட்ட விழைவது.

வேலுப்பிள்ளை பிரபாகரனை, 'தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்' என்றோ அல்லது 'அண்ணன் பிரபாகரன்' என்றோ அல்லது 'தம்பி பிரபாகரன்' என்றோ அழைப்பதல்ல விடயம்.

நான் குறிப்பிட வரும் விடயத்தை சற்றுப் புரிய வைப்பதற்காக ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்.

இதற்கு நீண்ட காலம் ஒரு பத்திரிகையாளனாக நான் அவருடன் பழகியவன் என்ற உரிமையோடு – அவரின் அனுமதியின்றியே – ஒருவரை உதாரணம் காட்ட விரும்புகிறேன்.

அவர், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம். நீண்ட காலமாக அவருடன் உரையாடியிருக்கிறேன். 'பிரபாகரன்' என்ற பெயர் வரும்போதெல்லாம் அவர் வெறும் பிரபாகரன் என்று கூறவே மாட்டார். 'தலைவர் பிரபாகரன்' என்றே அவர் வாயிலிருந்து வரும். அது வார்த்தை நடிப்பு அல்ல. அந்தத் 'தலைவர்' என்ற சொல், தமக்குத் 'தலைவர்' என்ற நிலையையும் தாண்டி, தமிழினத்தின் தலைவர் என்ற முறையில் 'தேசியத் தலைவர் பிரபாகரன்' என்ற சொல்லாடலின் சுருக்கமாகவே அவர் வாயிலிருந்தும் மனதில் இருந்தும் வருகின்றமையை நான் அவதானித்து உணர்ந்திருக்கிறேன்.

பெரும்பாலும் விடுதலைப் புலிகள் இந்த மண்ணில் போராட்டம் நடத்திய காலத்தில் இந்த மண்ணில் இருந்து செயற்பட்ட அரசியல்வாதிகள் பலரும் 'தலைவர் பிரபாகரன்' என்றோ அல்லது 'தேசியத் தலைவர்' என்றோதான் குறிப்பிடுவர்.

அது வெறும் வாய் வார்த்தை ஜாலம் அல்ல. அந்தத் தியாக வேள்வி மீதான நெருக்கத்தில் – பற்றில் – இருந்து வந்த உணர்வு.

இப்போது 'அண்ணன் பிரபாகரன்' என்று அழைப்பதா, 'தம்பி பிரபாகரன்' என்று அழைப்பதா என்பதல்ல பிரச்சினை.

சம்பந்தனோ, சுமந்திரனோ அப்படி மாறி மாறி அழைக்கலாம். அல்லது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாழ்ப்பாணக் கூட்டத்தில் குறிப்பிட்டமை போல 'மிஸ்டர் பிரபாகரன்' என்றும் கூட அவர்கள் அழைக்கலாம். அது குறித்து அறிய யாருக்கும் அதிக ஆர்வம் இல்லை. ஏனெனில் தலைவர் பிரபாகரன் குறித்து சம்பந்தனினதும், சுமந்திரனினதும் மனப்பதிவு யாது என்பது மக்களுக்குத் தெரியும். அங்கு நடிப்பு இல்லை.

ஆனால் நீதியரசர் விக்னேஸ்வரன் பார்வையில் தலைவர் பிரபாகரன் என்ன நிலையில் இன்று இருக்கின்றார் என்பதுதான் கேள்வி.

அவர் 2013இல் அரசியலுக்குள் நுழைந்த சமயம் புலிகள் குறித்தும், அவர்களின் தலைமை குறித்தும், தலைவர் குறித்தும் என்ன நிலைப்பாட்டில் இருந்தார், வல்வெட்டித்துறைக் கூட்டத்தில் தலைவரின் பெயர் குறிப்பிட்டதும் கிடைத்த பெரும் கரகோஷத்தை அடுத்து அவரின் நிலைப்போக்கில் ஏற்பட்ட மாற்றம், அவர் பிரயோகித்த சொற்பிரயோகங்கள் எல்லாம் பதிவுகளில் உள்ளன. அவை இப்போது விடயமுமல்ல. விவகாரமுமல்ல. தேவைப்பட்டால் தனித்து ஆராயலாம்.

ஆனால் இப்போது அவரின் நிலைப்பாடு என்ன?

'தலைவர் பிரபாகரனா', 'தேசியத் தலைவர் பிரபாகரனா' அல்லது வெறும் 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனா?', அல்லது இவை எல்லாமும் இல்லாமல் மொட்டையாக 'தம்பி பிரபாகரன்' மட்டும்தானா?

தலைவர் பிரபாகரனை அவர் 'அண்ணன் பிரபாகரன்' என்று அழைக்க முடியாது என்பது சரிதான்.

ஆனாலும் 'தலைவர் பிரபாகரன்', 'தேசியத் தலைவர் பிரபாகரன்' என்றெல்லாம் அவர் விளிக்க முடியும். விளிப்பாரா? விளிக்கத் தயாரா?

எமக்குத் தேவை வட்டுக்கோட்டைக்கு வழிதான். துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு விவகாரம் அல்ல.

அவரின் பதில் கிடைத்தால் வாசகர்களோடு நிச்சயம் பகிர்ந்து கொள்வோம்.

–மின்னல் –

## 7 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

47 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த மார்ச் முதலாம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தல் நிறைவடைந்து இரண்டு வாரங்களின் பின்னர் மேலும் சுமார் 7 ஆயிரம் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

## அல்லாரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வர்த்தகர் கடையில் இருந்தபோது நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று இந்த வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், 40 வயதுடைய, குஞ்சுராசா அஜந்தன் என்பவர் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆலோசனைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிக்காமல் ஒருவருக்கு ஒருவர் நெருக்கமாகச் செயற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

விசேடமாக பொது போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும்போது ஒரு ஆசனத்தில் ஒரு பயணி பயணிப்பதுடன், முகக் கவசம் அணிவது மிகவும் முக்கியமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான இடங்களில் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றாமல் இருப்பது ஆபத்தாக மாறும். இவ்வாறான பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் காலப்பகுதியில் சுகாதார சட்டங்களை முழுமையாகச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபயவின் இயல்பு, அவருக்கு இருக்கும் இராணுவத்தில் கடமையாற்றிய அனுபவங்கள், இப்போது அவர் ஜனநாயக ரீதியாக ஒரு அரச தலைவராக வந்துள்ளார் மக்கள் ஆதரித்து இருக்கின்றார்கள்.

ஆனால் அவர் இந்தப் பிரதேசத்தில் நாங்கள் அறிந்த வகையில் 20 ஆயிரம் உளவாளிகளையும் நடமாட விட்டிருக்கிறார் என எங்களுக்குச் செய்திகள் வந்துள்ளன.

எதிர்காலத்தில் பூரணமான இராணுவ ஆட்சி ஒன்றை அவர் நிறுவுவதற்கு – ஒரு சர்வாதிகாரமான ஆட்சியொன்றை ஜனநாயகத்துக்கு ஊடாக, ஜனநாயகத்தில் பெற்ற வெற்றி என்று சொல்லி இந்த நாட்டில் நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன.

இந்த நிலைமையில் இன்றைக்கு ஜனநாயக சக்திகள் எதிர் அணியில் ஐக்கிய தேசியக் கட்சியும் பலவீனப்பட்டு பிளவுபட்டு நிற்கின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது.

அதை விட முஸ்லிங்கள் தரப்பில், மலையகத் தரப்பில் கூட எல்லோரும் பலமாக அல்லது ஒன்றாக இருக்கின்றார்கள் என்ற நிலைமை இன்னும் ஏற்படவில்லை.

அதை விட முக்கியமாக வடக்கு – கிழக்குப் பிரதேசங்களிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாக ஒரு பலமான நிலையை நிருபிக்க வேண்டிய – பிரதிநிதித்துவத்தை நிருபிக்க வேண்டிய – ஜனநாயக சக்தியாக பலமடைய வேண்டிய நிலைமை ஏற்படவேண்டும்.

ஆனால் இதுவரை கிழக்கிலிருந்து வடக்கு வரைக்கும் பல மாவட்டங்களுக்கு நான் பயணம் செய்து இருக்கின்றேன். பல நிகழ்வுகளில் கலந்துகொண்டிருக்கின்றேன். சில இடங்களில் அண்மைக் கால நிகழ்வுகள் தொடர்பாகச் சில சங்கடங்கள் இருந்தாலும் மக்கள் மிக உறுதியாக இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பெரு வெற்றிபெற வைப்பதே இப்போது தேவை என நினைக்கின்றார்கள் – என்றார்.

## டக்ளஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தியமை ஒரு தேர்தல் விதிமுறை மீறல் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இ.போ.சபை அலுவலகத்துக்கு கடந்த செவ்வாய்கிழமை பயணித்த ஈ.பி.டி.பியின் வேட்பாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தேர்தல் கூட்டத்தில் ஈடுபட்டமை ஒரு பகிரங்கமான தேர்தல் விதிமுறை மீறல் எனவும் –

இ.போ.சபைக் கட்டடத்தில் அமைச்சர் இருந்து உரையாற்றுவது, முகாமையாளர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டமை, இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ்கள் அருகே நிற்பவை போன்ற புகைப்படத்துடன் அதன் ஒளி வடிவமும் ஆதாரமாக வழங்கப்பட்டு அந்த விடயம் தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## சம்பிக்கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணவக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மா அதிபர் கொழும்பு மேலதிக நீதவானுக்கு அறிவித்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொய்ச் சாட்சியங்களை உருவாக்கியதாகவும், சாட்சியங்களை மறைத்ததாகவும் தெரிவித்து, சம்பிக்க ரணவக மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சுதத் அஸ்மடல ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக, குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மாஅதிபர் கொழும்பு மேலதிக நீதவானுக்கு அறிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி தாக்குதல் தொடர்பில் அறிந்திருந்தும் அதனை வெளிப்படுத்தாத அவரை மனிதப் படுகொலை குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் அனைத்து இன, மத மக்களினதும் பௌத்த தேரர்களினதும் கூட கௌரவத்துக்கும் அபிமானத்துக்கும் உரியவராகப் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை திகழ்கின்றார். அவரைக் கேலி செய்யும் விதத்தில் ஹரீன் பெர்னாண்டோ நடந்துகொண்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் தமது தந்தையார் தெரிவித்திருந்தும் அதனை வெளிப்படுத்தாது தாம் அன்று ஆலயத்துக்குச் செல்லவில்லை என ஹரீன் பெர்னாண்டோ கூறியதும், தம்மைப் பாதுகாத்துக் கொண்டு கத்தோலிக்க மக்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற தோரணையில் அவர் கூற்றுக்களை தெரிவித்திருந்ததையும் எவ்வாறு ஏற்க முடியும்?

மேற்படி தாக்குதலில் தாய் யார்? தந்தை யார்? மகன் யார்? உறவினர் யார்? என்று கூட இனம் கண்டுகொள்ள முடியாத நிலையில் ஒரே குவியலாக அனைத்து மனித சதைகளும் காணப்பட்டதை சகலரும் அறிவர். அந்தநிலையில் அவர் மனிதப் படுகொலை குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட வேண்டும் – என்றார்.

## தமிழரின் ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் களமிறங்கியுள்ள தமிழ்க் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டுமே விமர்சித்து வருகின்றமை தொடர்பில் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதித்துவக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருந்து வருகின்றது. இந்த நிலையில், கூட்டமைப்பின் வாக்கு வங்கியை உடைக்க வேண்டும் என்பது தென்னிலங்கையின் திட்டமாக இருக்கின்றது. அதற்காகக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களும் அரசின் ஆதரவுடன் தேர்தலில் கட்சிகளினூடாகவும் சுயேச்சைக் குழுக்களினூடாகவும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சொந்தமான வாக்குகளைச் சிதறடிப்பதே அவர்களின் நோக்கம். அதற்காகத்தான் அவர்கள் ஊடகவியலாளர் மாநாடுகள் நடத்தியும், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்குபற்றியும், மக்கள் சந்திப்புக்களை நடத்தியும் கூட்டமைப்பினரை விமர்சித்து வருகின்றனர். அவர்களின் விமர்சனங்கள் எமக்குச் சவால்கள் அல்ல. அவை எமக்கான வெற்றிப்படிகள்.

வரித்துக்கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் தமிழ் மக்கள் எம்மை அமோக வெற்றியடையச் செய்வார்கள். அதனூடாக எம்மை விமர்சிக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் எமது மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் – என்றார்.

## பிரிந்தவர்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருக்கின்றேன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவராக இருக்கின்றேன். அவ்வாறு நான் ஒரு கட்சியின் தலைவராக இருந்துகொண்டு மாற்றுத் தலைமை வேண்டும் என்று சொல்வதைப்போல அறிவீனம் வேறு ஏதும் இருக்காது.

தமிழ்மக்களிடம் ஒரு மாற்றுத்தலைமை வேண்டும் என்பது பரவலான செல்வாக்கு மிகுந்த கோரிக்கையாக இன்று இல்லை.

துரதிஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியிருக்கின்றார்கள். எனக்கு அது மிகுந்த கவலை.

தேர்தல் முடிந்த பிறகு அவர்களை இணைத்து இந்த நெருக்கடியாக – மோசமான காலகட்டத்தில்

பக்கம் 11 »

# சிங்கள இராணுவத்தினரைக் கொலை செய்வதற்கு கருணாவுக்கு ஆயுதம் வழங்கியவர் பிரேமதாஸாவே!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ காட்டம்

சிங்கள இராணுவத்தினரைக் கொலை செய்ய கருணா அம்மான் உள்ளிட்ட விடுதலைப் புலிகளுக்கு சஜித் பிரேதாஸவின் தந்தையான ரணசிங்க பிரேமதாஸவே ஆயுதம் வழங்கினார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமக்கு யார் ஆயுதம் வழங்கினர் என்பதை கருணா கூறவில்லை. இந்த விடயம் குறித்து கதைப்போர், யார் ஆயுதம் கொடுத்தார்கள் என்பது குறித்தும் கதைக்க வேண்டும். கருணா உள்ளிட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தவர்கள் யார்?

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? சஜித் பிரேமதாஸின் தந்தையான பிரேமதாஸவே ஆயுதங்களை வழங்கினார். யாரைக் கொல்வதற்கு ஆயுதம் கொடுத்தார்? சிங்கள் மக்களையும் சிங்கள இராணுவத்தினரையும் கொலை செய்வதற்காகவே ஆயுதம் கொடுத்தார்.

சிங்கள இராணுவத்தினரைக் கொலை செய்யவே ஆயுதங்களை வழங்கினார்.

இவ்வாறு ஆயுதம் கொடுத்து உதவிய நபரின் புதல்வரே தற்போது 'கருணா அம்மான்', 'கருணா அம்மான்' என்று கூச்சலிடுகின்றார்.

கருணா அம்மானின் வரலாறு குறித்து நான் கதைக்கப் போவதில்லை. அது உங்களுக்குத் தெரியும். அதனுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரையும் உங்களுக்குத் தெரியும். அதன் பின்னர் என்ன நடந்தது என்பதும் தெரியும் – எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## மொனறாகலை சிறையினுள் கைதி தூக்கிட்டுத் தற்கொலை

மொனறாகலை சிறைச்சாலையினுள் கைதியொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்தக் கைதி சிறைச்சாலை வைத்தியசாலையினுள் இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் அவர் மொனறாகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் இதற்கு முன்னரும் சிறைச்சாலையினுள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

பகிணிகஹவெல, மெதகம பிரதேசத்தை சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். உயிரிழந்த கைதியின் சடலம் மொனறாகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மொனறாகலை சிறைச்சாலை மற்றும் மொனறாகலை பொலிஸாரினால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## மாணவருக்கு சைக்கிள்கள்



முல்லைத்தீவு ஐயன்குளம் பாடசாலையை சேர்ந்த மாணவர்களுக்கு ஆறு சைக்கிள்கள் 'செயல்' அமைப்பினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தூரப் பிரதேசத்திலிருந்து வரும் மாணவர்கள் முறையான போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலைக்கு ஒழுங்காக சமுகமளிக்காத நிலைமை காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (உ – 11)

## நூறு போதை மாத்திரைகளுடன் குச்சவெளியில் இளைஞர் கைது

(எவ். முபாரக்)

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நூறு போதை மாத்திரைகளை வைத்திருந்த நபர் ஒருவரை இம்மாதம் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க நேற்று உத்தரவிட்டார்.

குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குச்சவெளி பிரதேசத்தில் போதை மாத்திரைகள் விற்பனை செய்து வருகிறார் எனக் குச்சவெளிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் நூறு போதை மாத்திரைகளுடன் அவரைக் கைது செய்தனர் எனவும், சந்தேக நபருக்கெதிராக நீதிமன்றில் போதை பாவனை குற்றச்சாட்டுகளுடன் தொடர்பான வழக்குகள் திருகோணமலை நீதிமன்றில் நடைபெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஆட்ட நிர்ணய சதிக்கான சந்தேகம் ஏற்பட்டமைக்கு 24 காரணங்களை முன்வைத்தாராம் மஹிந்தானந்த!

## பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த பின்னர் அவரே தகவல்

"2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில், ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றிருக்கும் என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது. இதற்கான 24 காரணங்களை பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவிடம் முன்வைத்துள்ளேன். எனவே, எனது அறிவிப்பை அரசியல் மயப்படுத்தாமல் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப்போட்டி தொடர்பில் அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்த மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்ட கருத்து, இலங்கை அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினர் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர். நாவலப்பிட்டியவில் உள்ள அவரின் அலுவலகத்தில் வைத்தே சுமார் இரண்டு மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் –

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தைக் கண்காணிப்பதற்காக நானும் சென்றிருந்தேன். எமது அணி தோல்வி அடைந்தமை தொடர்பில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அதன்பின்னர் பல தரப்பினரும் அந்தப் போட்டி தொடர்பில், எனக்கு முறைப்பாடுகளை முன்வைத்தனர். இது தொடர்பில் நான் ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தாலும் இம்முறையே பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது. நான் எந்தவொரு வீரரினதும் பெயரைக் குறிப்பிடவில்லை.

ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றிருக்கலாம் என்பதற்கான கருத்துகளையும், ஆவணங்களையும் நான் இன்று பொலிஸாரிடம் கையளித்தேன். 24 காரணங்கள் அடங்கிய 6 பக்க அறிக்கையை முன்வைத்துள்ளேன். விசாரணைகள் இடம்பெறுவதால் அவை எவ்வாறான விடயங்கள் எனக் கூறமுடியாது.

நான் அரசியல் நோக்கிலோ அல்லது பிரசாரம் தேடுவதற்காகவோ இவ்வாறு கருத்து வெளியிடவில்லை. எனவே, விசாரணைகள் முடிவடையும்வரை விமர்சனங்களை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். பேசுவதை நிறுத்துவோம். விசாரணை அறிக்கை வரும்வரை காத்திருப்போம். – என்றார்.



## கிழக்கு ஆளுநரை சந்தித்த தூதர்கள்

இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதர் ஜோர்ன் ரோட், இலங்கையில் ஐரோப்பிய ஒன்றிய தூதர் டெனிஸ் சாய்பி ஆகியோர் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை நேற்றுக் காலை திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்துக் குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் போது புதிய அரசு கல்வித்துறைக்கு முன்னுரிமை அளிக்கும் என்று ஆளுநர் கூறினார். மேலும், விவசாயத்தை மேம்படுத்துவதற்கும் விவசாயிகளை கரிம உரங்களை பயன்படுத்த ஊக்குவிப்பதற்கும் அரசாங்கம் கடுமையாக உழைத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும், விவசாயத் துறையைப் பயன்படுத்தி புதிய சுற்றுலா மண்டலங்களை நிறுவவும் இரு தூதர்களும் ஆளுநரிடம் அழைப்பு விடுத்தனர். இந்த சந்திப்பில் ஆளுநர் செயலாளர் எல்.பி. மதநாயக்க மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வேலையாள்கள் தேவை

சர்வதேச புலவர் திருமண சேவை
அலுவலகத்திற்கு
வேலையாட்கள் தேவை
(பெண்கள் மட்டும்)

தொடர்புகளுக்கு - 071 335 2215
077 5737301

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாவையின் முதலைக் கண்ணீர்

'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்' என்பர்.

அதையே 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுவது...' என்றும் கூறுவர்.

உரிய வேளையில் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறி விட்டு அதைப் பற்றிக் கவலைப்பட்டு அர்த்தமில்லை.

தமிழர்களின் இப்போதைய நிலைமை தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா படும் கவலையை நோக்கும்போது இந்தப் பழமொழிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

'தமிழர் ஐக்கியம்' தொடர்பில் படித்துப் படித்துக் கூறிய போதெல்லாம் உதாசீனம் காட்டி, விட்டேத்தியாக நடந்து, பொறுப்பின்றிச் செயற்பட்டவர் இப்போது 'பகவத்கீதை' உபதேசிப்பது போல தத்துவம் பேச முயல்கின்றார்.

*"துரதிஷ்டவசமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியிருக்கின்றமை எனக்கு மிகுந்த கவலை. தேர்தல் முடிந்த பின்னர் அவர்களையும் இணைத்து இந்த நெருக்கடியான காலகட்டத்தில் அடுத்த கட்டத்துக்கு நகர வேண்டும்"* என்று அவர் கூறியிருக்கின்றமை வேடிக்கைக்குரியது.

வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் எல்லோரையும் தூக்கி எறிந்து நடந்து, பொறுப்புடைய தலைமைக்குரிய கடமையைச் செய்யாமல், தமிழர் தரப்பை பல அணிகளாக சிதறுண்டு போகச் செய்து விட்டு, இப்போது அவர் முதலைக் கண்ணீர் – நீலிக் கண்ணீர் – வடிப்பது அர்த்தமற்றது.

காலங்காலமாக தாங்கள் மட்டுமே நாடாளுமன்றக் கதிரையைச் சூடேற்ற வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தேர்தல் வரைத் திட்டமிட்டுப் பலரையும் ஒதுக்கி, வெட்டி, வெளியேற்றி, புறம்தள்ளி, காரியமாற்றி விட்டு, இனித் தேர்தலில் கூட்டமைப்புப் பட்டியலில் தங்களுக்குப் போட்டியாக அவர்கள் வரமாட்டார்கள் என்று தெரிந்தும் ஒற்றுமை பற்றி நடிக்கத் தொடங்கியிருக்கின்றார் மாவையார்.

1989 இல் அமிர்தலிங்கமும், 1999 இல் நீலன் திருச்செல்வமும் கொல்லப்பட்டபோது அந்த இடங்களுக்குப் போட்டியிட்டு தேசியப் பட்டியல் எம்.பி.பதவியைப் பெற்று நாடாளுமன்றுக்குப் போனவர் அவர். அதற்குப் பின்னர் 2000, 2001, 2004, 2010,2015 என்று ஐந்து தடவைகள் தொடர்ச்சியாகப் பதவியில் நீடிப்பவர். மொத்தம் ஏழு தடவைகள் எம்.பியாக இருந்தவர்.

இப்போது எட்டாவது தடவையும் எம்.பியாகிக் கொண்டு இதுவரை வெளியியில் விட்டவர்களை இனிமேல்தான் அரவணைக்கப் போகின்றாராம். யாரின் காதில் பூச்சுற்றுகின்றார்? யாரின் தலையில் மாவரைக்க விரும்புகின்றார்?

தகுதியும், திறமையும், இன விசுவாசமும், நேர்மையும் கொண்ட பலரை வெட்டி ஒதுக்கி, தமிழரசு மீது இளம் தலைமுறைக்கு எரிச்சல் வரச் செய்தவரே அவர்தான். இப்போது தேர்தல் நெருக்கடி சமயத்தில் வழமைபோல 'ஐக்கியம் முக்கியம்', 'எல்லோரையும் அரவணைப்போம்' என்று வேதம் ஓதுகின்றார்.

"துரதிஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியுள்ளனர். அது எனக்கு மிகுந்த கவலை" என்ற அவரது கூற்று உண்மையானால், அந்த துரதிஷ்டம் பெரும்பாலும் அவரால்தான் நேர்ந்தது என்பதையும், அவர் மீதுதான் அவர் கவலை கொள்ள வேண்டும் என்பதையும் வெளிப்படையாகவே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எம்.பி. பதவி மாத்திரமல்ல, கட்சித் தலைமைப் பதவியைக் கூட தன்னுடைய நிரந்தர ஆசனமாகக் கருதாமல்தான் கட்சியை வளர்த்தார் தந்தை செல்வா.

ஆனால் எம்.பி.பதவியிலும், தலைமைக் கதிரையிலும் நிரந்தரமாக ஆணி அடித்தமை போல அமர்ந்து கொண்டு அவற்றைத் தக்க வைப்பதே பிரதான பிழைப்பு என்ற சிந்தனையில் காய்களை நகர்த்தியபடி, இலங்கைத் தமிழரசையும், தமிழ்க் கூட்டமைப்பையும் ஜனநாயக முறைப்படி இயங்கும் கட்டமைப்புகளாக மாற்றாமல், செம்பு காவிகளினதும், அடிவருடிகளினதும், வயோதிபக் கூட்டத்தினதும் மடங்களாக மாற்றியவாறு–

அதன் காரணமாக, திறமையுள்ள பலரையும் பல தரப்புக்களைம் அரவணைக்காமல் வெளியேற வைத்து, கூட்டமைப்பின் பலத்தை நீர்த்துப் போகச் செய்து விட்டு –

இப்போது அவர் நீலிக்கண்ணீர் வடிப்பது தேர்தல் வாக்குகளை இலக்குவைத்த குறுக்குப்புத்திப்போக்கின்றி வேறில்லை.

நாளைக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டாலும், முதலமைச்சர் பதவிக்கு நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு வரும் ஏதோ ஐந்து போல போட்டிக்கு வரும் நிலையில் இருப்பவர், கூட்டமைப்பிலிருந்து பலரும் வெளியேறியமை பற்றி அரற்றுவது லாயக்கற்ற நடிப்பு.

தமது பதவி ஆசையையும் அதையொட்டி வரும் பிற சலுகைகளையும் நாடி ஓடுவதை அவர் தள்ளி வைத்துவிட்டு, கட்சியின் நடுநிலைத் தலைவராக அவர் செயற்பட்டாலே போதும், கூட்டமைப்பு வலுப்பெறுவதற்கு அது அடி அத்திபாரமாகி விடும்.

அவரும் அதைச் செய்யப் போவதில்லை. தமிழரும் வேறு தகுதியான மாற்று வழியில்லை என்பதால் கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் விடப்போவதுமில்லை. ஆக, பதவிப் பித்துப் பிடித்த அவரின் நடிப்புப் படலம் நன்றாகவே செல்லுபடியாகும். அது தமிழரின் தலைவிதி. அவ்வளவுதான்.



# காணியை மீட்டுத்தருமாறு மக்கள் தொடர் போராட்டம்

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட காஞ்சூரமோட்டை மக்கள் தமது காணியை மீட்டுத்தருமாறு கோரி வனவளத் திணைக்களத்துக்கு எதிராக நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1980, 1990 காலப் பகுதியில் இப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறு பகுதிகளுக்குச் சென்ற மக்கள் மீண்டும் வந்து காடுகளாகக் கிடக்கும் தமது காணிகளைத் துப்புரவு செய்து கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

எனினும், இக் காணிகள் தமக்குரியவை என்று வனவளத் திணைக்களத்தால் நீண்டகாலமாகக் கூறப்படுவதுடன் மக்கள் மீள்குடியேறுவதிலும், வீடுகளை அமைப்பதற்கும் தடையை ஏற்படுத்தி வருகின்றது.

காணிகளை துப்புரவாக்கினாலோ அல்லது கட்டுமானப் பணிகளை மேற்கொண்டாலோ கைது செய்வோம் எனவும் மக்களை வனவளத் திணைக்களத்தினர் எச்சரித்து வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்களுக்கும் வனத்துறையினருக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வருகின்றது.

வனவளத் திணைக்களத்தால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற மக்கள் தமக்கான தீர்வைக் கோரி தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்

சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கருணாவுக்கு வாக்கு போடுவதும் விக்கிக்கு வாக்களிப்பதும் ஒன்றே

## கூட்டமைப்பின் வன்னி வேட்பாளர் மயூரன்



வவுனியா, ஜூன் 24

கருணாவுக்கு வாக்களிப்பதும் விக்னேஸ்வரனுக்கு வாக்களிப்பதும் ஒரே முடிவையே தரும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் செ. மயூரன் தெரிவித்தார்.

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வருகின்ற தேர்தலானது எம்மை பொறுத்தவரை மிகவும் முக்கியமான தேர்தலாகும்.

ஏனெனில் எமக்கான அரசியல் இருப்பை, எமது உரிமைக்கான இருப்பை நிர்ணயம் செய்கின்ற தேர்தலாக இது இருக்கப்போகின்றது.

அகிம்சை வழியில் போராடிப் பார்த்தோம். பின்னர் அண்ணன் பிரபாகரன் தலைமையில் ஆயுதமேந்தி போராட்டத்தினை முன்னெடுத்துச்சென்றபோது எங்களுக்குள் உள்ள சில துரோகிகளின் காட்டிக்கொடுப்புகள் காரணமாக 2009 ஆம் ஆண்டு எங்களுடைய நிலப்பரப்புக்களை எங்களுடைய ஆயுதப்பலத்தைக் கைவிட்டு அரசியல் ரீதியான போராட்டத்தை இன்று முன்னெடுத்து சென்றுகொண்டிருக்கின்றோம்.

ஆயுதப்போராட்டம் உச்சம் பெற்றுக்கொண்டிருந்தபோது கருணா அம்மான் போன்ற துரோகிகள் எமது ஆயுதப்போராட்டங்களை சின்னாபின்னமாக்கி எமது இருப்பை கேள்விக்குறியாக்கிய நிலையில் எமது அரசியல் ரீதியான போராட்டத்தில் இன்று விக்னேஸ்வரனும் எங்களோடு உடன் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் இன்று கருணா அம்மான் செய்த அதே துரோகத்தனத்தைச்செய்துகொண்டிருக்கின்றனர்.

நல்லவர் போல வேடமணிந்து முன்னாள் முதலமைச்சர் இன்று எங்களிடம் வாக்குகளை கேட்கின்றார். என்னைப் பொறுத்த வரை கருணா அம்மானுக்கு வாக்களிப்பதும் விக்னேஸ்வரனுக்கு வாக்களிப்பதும் ஒரே முடிவையே சொல்லும். எங்களைப் பொறுத்தவரையில் எல்லோரும் துரோகிகளே - என்றார்.

# 1,000 ரூபா நாள் சம்பளம்; முத்தரப்புப் பேச்சு இன்று

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பான முத்தரப்பு பேச்சு நாளை 25 ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவை வழங்குமாறு பிரதமர் கூறியதுடன், அதற்கான சாத்தியப்பாட்டு அறிக்கையை அடுத்த சந்திப்பில் முன்வைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அடுத்த சுற்று பேச்சு 25 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.








# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு முன் நேற்று மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 25

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையின் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கோரி களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் முன்பாக கவன ஈர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையின் அபிவிருத்திக் குழுவினர் மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேச பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது 'ஆளணிப் பற்றாக் குறையை பூர்த்தி செய்', 'வைத்தியர்களின் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்', 'நியமனங்களில் அரசியல் தலையீடு வேண்டாம்', 'களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்' - போன்ற சுலோகங்களை தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கபட்டது.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் பௌதீக வளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் வைத்தியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருவதாகவும் இதனை தீர்த்து வைக்க உரியவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

53 வைத்தியர்கள் இருக்க வேண்டிய வைத்தியசாலையில் 14 வைத்தியர்களே கடமையாற்றுகின்றனர் எனவும், புதிதாகக் கடமையேற்று வரும் வைத்தியர்கள் செல்வாகினைப் பயன்படுத்தி இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர் எனவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவு உட்பட முக்கிய சிகிச்சை பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ள நிலையிலும் அவை வைத்தியர்கள் இல்லாத காரணத்தால் சிகிச்சையளிக்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

களுவாஞ் சிக்குடி ஆதார வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள வைத்தியர் பற்றாக்குறை காரணமாக சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் நீண்ட நேரம் வைத்திய சாலையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதாகவும், குறிப்பிட்டளவு வைத்தியர்கள் இருப்பதன் காரணமாக அதிகளவான நோயாளிகளுக்கு சிக்கிச்சையளிக்க சந்தர்ப்பம் இல்லாத நிலமை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அரசாங்கம் இந்த நிலமையை கருத்தில் கொண்டு வைத்தியசாலையின் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நயினையில் பக்தர்கள் வழிபட கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்வு

நயினை நாகபூணி அம்மன் ஆலயத்தில் சமூக இடைவெளிகளைப் பேணி அடியவர்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும், உள் வீதியில் சுமார் 70 அடியவர்களையும் வெளி வீதியில் சுமார் 300 அடியவர்களையும் அனுமதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிசெயலகத்தில்நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூணி அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்ற நிலையில், பெருமளவான அடியவர்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும் கொரோனா தொடர்பான முற்பாதுகப்பு நடவடிக்களினால் அடியவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இவ்விவகாரம் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.


இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் அடங்கிய அமைச்சரவை அமைச்சர்கள், அடியவர்களின் வழிபாட்டு செயற்பாடுகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிலையிலேயே, சமூக இடைவெளியைப் பேணவதுடன் சுகாதார பிரிவினரினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்கள் உற்சவகால வழிபாடுகளில் கலந்து கொள்ளவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு 'நயினை நாக பூணி அம்மன் ஆலயத்தில் அடியவர்கள் சுதந்திரமாக வழிபட அமைச்சரவையில் தீர்மானம் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை!' - என்ற தலைப்பில் ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் வெளியிட்ட செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

# அம்புலன்ஸ் - மோ.சைக்கிள் மோதி விபத்து; இளைஞர் பலி

## மட்டு. – திருமலை வீதியில் சம்பவம்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி, இருதயபுரம் பகுதியில், அம்புலன்ஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில், தோப்பூர் - அல்லைநகர் பகுதியைச் சேர்ந்த ஜவாஹிர் முஹம்மட் அஹ்ஸான் (25 வயது) என்பவரே உயிரிழந்தார் எனத் தெரியவருகின்றது.

கிளிவெட்டி பிரதேச வைத்தியசாலை அம்புலன்ஸ், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு நோயாளர்களை கொண்டு சென்று, மீண்டும் வைத்தியசாலைக்குத் திரும்பிய போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தோப்பூரிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மேற்படி இளைஞன் அம்புலன்ஸூடன் மோதி படுகாயமடைந்த நிலையில், மூதூர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்துள்ளாரென, ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய அம்புலன்ஸ் சாரதியைக் கைது செய்துள்ளனர் எனவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# நிகழ்வுகளில் பங்குபற்றுவோர் தொகையை அதிகரிக்க திட்டம்

திருமண வைபவங்கள் உள்ளிட்ட ஏனைய நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையை 200ஆக அதிகரிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பான முன்மொழிவு, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணிக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அகில இலங்கை நிகழ்வு மண்டபங்கள் மற்றும் உணவு விநியோகஸ்தர்கள் சங்கத்துடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக திருமண வைபவம் உள்ளிட்ட பிற நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை 100ஆக இதுவரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை போதாது என்று குறித்த சங்கத்தின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இன்று முதல் 3 நாள்களுக்கு டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

கொழும்பு,ஜூன் 25

நாடளாவிய ரீதியில் இன்று முதல் எதிர்வரும் 3 நாள்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நுளம்பு பரவும் அபாயம் அதிகம் காணப்படும் வலயங்களாகப் பெயரிடப்பட்டுள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளை அண்மித்த இடங்களில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் அதிகளவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரஅமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 22,000 இற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமையோடு இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

காலைக்கதிர்
Kalaikkathir

# ஈரானில் தமிழக மீனவர்கள் மீட்க நடவடிக்கை இல்லை!

## கைவிரித்தது நீதிமன்றம்

ஈரானில் புலம் பெயர் தொழிலாளர்களாக இருக்கின்ற தமிழக மீனவர்கள் 500 பேர் கொரோனாத் தொற்றுக் காரணமாக விதிக்கப்பட்ட முடக்கங்களால் ஈரனிலேயே தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்களை மீட்பதற்கு அரச தரப்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப் படாத பட்சத்தில் அவர்களை மீட்கக்கோரி இந்திய உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஈரான் துறைமுகத்தில் 500க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களைக் கொரோனா நோய்த் தொற்று காலத்தில் சொந்த இடத்துக்கு அனுப்ப மறுக்கின்றனர். தற்போது உணவு, குடிதண்ணீர், மருந்து போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்படாது படகுகளுக்கு உள்ளேயே தங்கியிருக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள் ளனர்.

அந்த மீனவர்களை மீட்பதற்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் விசாரணைகளின் பின்னர் தள்ளுபடி செய்தனர். இந்த மனு விசாரணைக்குத் தகுதியானது இல்லை என்று தெரிவித்தனர்.




# மற்றொரு கேலிச் செயல்!

எல்லை மோதலில் இந்தியச் சிப்பாய்கள் உயிரிழந்ததைத் தொடர்ந்து இந்தியாவில் சீனாவுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த வாரம் நடந்த ஒரு போராட்டத்தில் சீன அதிபருக்குப் பதிலாக வடகொரிய அதிபரின் உருவப்படத்தை எரித்திருந்தனர் போராட்டக்காரர்கள்.

இந்த நிலையில் தற்போது சீன வரைபடத்துக்கு பதிலாக அமெரிக்க வரைபடத்தை ஏந்திப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இது சமூக வலைதளங்களில் பெரும் கேலிக்குள்ளாகியுள்ளது.

கொல்கத்தாவில் கடந்த 19ஆம் திகதி நடந்த இந்தப் போராட்டத்தில் போராட்டக்காரர்கள் சீனப்பொருள்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கோசமிட்டபடி சீன அதிபர் ஜின்பிங்கின் படத்துடன் அமெரிக்க நாட்டின் வரைபடத் தைச் சேர்த்திருந்தனர்.

## கைகலப்பில் பங்குபற்றிய சிப்பாய்களுக்குப் பாராட்டு



இந்தியா – சீனா எல்லையில் நடந்த கைகலப்பில் ஈடுபட்ட இந்தியச் சிப்பாய்களை இந்திய இராணுவத் தளபதி பாராட்டி மதிப்பளித்தார்.

இது குறித்து இந்திய ஊடகங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

எல்லையில் சீன இராணுவத்தினருடன் போராடிய இந்திய வீரர்களை இந்திய இராணுவத் தளபதி மனோஜ் முகுந்த் நரவனே பாராட்டினார். பாராட்டியதுடன் அவர்களுக்குச் சிறப்புப் பட்டிகளும் அணிவித்தார்.

எல்லைப் பகுதியைப் பார்வையிடுவதற்காக லடாக் சென்ற இராணுவத் தளபதி அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வீரர்களிடம் நலம் விசாரித்தார். தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்தார். சீன இராணுவத்துடன் போராடிய வீரர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்ததுடன் இதேபோல் தொடர்ந்து உற்சாகமாகப் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார் – என்றன.

# இந்தியா சொன்னது முழுப்பொய்! எமது சிப்பாய்கள் இறக்கவில்லை



## சீனா தரப்பில் தெரிவிப்பு

இந்தியா – சீனா எல்லைப் பகுதியான கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த மோதலில் சீனச் சிப்பாய்கள் 40பேர் கொல்லப்பட்டனர் என்று இந்தியத் தரப்பினர் பரப்பிய செய்திகளில் உண்மைத் தன்மையில்லை என்றும் அவை பொய்யான செய்திகள் என்றும் சீனா தெரிவித்தது.

சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் லிஜியன் சோ என்பவர் இவ்வாறு தெரிவித்தார். கல்வான் பள்ளத்தாக்கில் நடைபெற்ற கைகலப்பில் 40க்கும் மேற்பட்ட சீனச் சிப்பாய்கள் உயிரிழந்ததாக இந்தியத் தரப்பில் கூறப்பட்டுவருவது தவறான தகவல். எல்லைப் பதற்றம் குறித்து இந்தியா – சீனா இடையே பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

### எல்லை மோதல்

இந்தியா – சீனா இடையேயுள்ள கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் இந்திய – சீனச் சிப்பாய்களிடையே கடந்த 5 ஆம் திகதி கைகலப்பு ஏற்பட்டது. இதில் 20 இந்தியச் சிப்பாய்கள் சாவடைந்தனர். பலர் காயம் அடைந்தனர். தமது தரப்பில் ஏற்பட் பாதிப்புகள், இழப்புகள் குறித்துச் சீனா தரப்பில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. அதற்கிடையில், சீனத் தரப்பில் 35 பேர் வரை உயிரி ழந்து இருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவிப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி பரப்பின. இந்தியச் சிப் பாய்களைவிட இரண்டு மடங்கில் சீனச் சிப்பாய்கள் இறந்திருப்பார்கள் என்று இந்திய அமைச்சர் ஒருவரும் ஊகம் சொன்னார். இந்த நிலையிலேயே இந்தியத் தரப்பின் இது குறித்த செய்திகளில் உண்மைத் தன்மை இல்லை என்று சீனா தெரிவித்துள்ளது. அத்தோடு இந்த எல்லை மோதலில் தமது தரப்பு சந்தித்த பாதிப்புகள், சேத விவரங்கள் குறித்த எந்தவொரு தகவலையும் இது வரை சீனா வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்திலும் தூத்துக்குடியிலும் கடையடைப்பு!

சாத்தான்குளம் காமராஜர் சிலை அருகே கடை நடத்தி வந்த ஜெயராஜ்(வயது 56). அவருடைய மகன் பென்னிக்ஸ்(வயது 31) ஆகிய இருவரும் கடந்த 19ஆம் திகதி இரவு ஊரடங்கு விதிகளை மீறிக் கடையைத் திறந்ததாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் இருவரும் அடுத்தடுத்து இறந்தனர். விசாரணைக் கைதிகளாக இருந்த அவர்களின் உயிரிழப்புக்குத் தமிழகம் முழுதும் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இந்தச் சம்பவத்தைக் கண்டித்துத் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை சார்பில் நேற்று முழுக் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் இன்று அனைத்துக் கடைகளும் அடைக்கப் பட்டன.

# எல்லை மோதலுக்கு இந்தியாவே காரணம்

## உறுதியுடன் மறுபடியும் சீனா

அண்மையில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே எல்லையில் கைகலப்பு மோதல் ஏற்படுவதற்கு இந்தியச் சிப்பாய்களே காரணம் என்று சீனா மறுபடியும் தெரிவித்தது. சீனாவின் பாதுகாப்பு அமைச்சகமே இதை உறுதிபடத் தெரிவித்தது.

எல்லையில் நடந்த இந்தியச் சிப்பாய்களின் அந்த நடவடிக்கைகள் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒருமித்த கருத்தை மீறியதுடன், ஒருதலைப்பட்சமாக ஆத்திரமூட்டலை ஏற்படுத்தின என்றும் சீன அமைச்சகம் தனது சமூக ஊடகக் கணக்கில் இது குறித்து மேலும் தெரிவித்தது. எல்லையில் நிலைகொண்டுள்ள இந்தியச் சிப்பாய்களின் ஒழுக்கமற்ற தன்மையே எல்லை மோதலுக்குக் காரணம் என்று முன்னதாகச் சீனாவின் வெளியுறவு அமைச்சகம் நீண்ட விளக்கத்தை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# குஜராத்தில் பெரும் தீ

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள தொழிற்சாலையில் பெருமளவில் தீ பரவியது. அதையடுத்து அந்தத் தீயை அணைப்பதற்குத் தீயணைப்புப் பணியாளர்கள் பலர் குவிக்கப்பட்டனர். 25க்கு மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களும் அந்த இடத்துக்கு அவசரமாக வரவழைக்கப்பட்டுத் தீ தணிக்கப்பட்டது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தின் சனந்த் பகுதியில் குஜராத் மாநில தொழிற்துறை மேம்பாட்டுக் கழக வளாகத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

தொழிற்சாலையின் ஒரு பகுதியில் பிடித்த தீ, மற்றப் பகுதிகளுக்கும் மளமளவெனப் பரவி எரிந்தது. இதனால் அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது. இந்தத் தீயால் ஏற்பட்ட இழப்புகள் குறித்த தகவல்கள் எவையும் உடனடியாக வெளியாகவில்லை.

# அமெரிக்கா மன்னிப்புக் கேட்டால் பேச்சு மேடைக்கு நாம் தயார்!



## ஈரான் தெரிவிப்பு

2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியதற்காக அமெரிக்கா மன்னிப்புக் கேட்டு ஈரானுக்கு இழப்பீடு வழங்குமாக இருந்தால் அமெரிக்காவுடன் பேசுவதற்கு ஈரான் தயாராகவிருக்கிறது என்று ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானி தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஈரானுடன் எட்டப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகியதிலிருந்து ஈரானின் பொருளாதாரத்தை முடக்கிப் பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்தி வருகிறார். அதனால் அமெரிக்காவுடனான பேச்சுக்களுக்கு ஈரான் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையிலேயே ஈரான் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அமெரிக்காவுடன் பேசுவதற்கு எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனால் அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா தனக்குரிய கடமைகளை நிறைவேற்றினால், மன்னிப்புக் கோரி, ஈரானுக்கு நஷ்ட ஈடு வழங்கினால் மட்டுமே பேச்சுகளுக்கு உடன்பட முடியும் என்று ரூஹானி மேலும் தெரிவித்தார்.

# நடுங்கியது மெக்சிக்கோ ஆறு பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக அங்கு6பேர் உயிரிழந்தனர். ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக இந்த நில நடுக்கம் பதிவாகியது.

மெக்சிக்கோவின் தென்பகுதியில் ஒக்ஸாக்கா மாகாணத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கத்தால் பலர் காயமடைந்தனர். கட்டடங்கள் சிலவும் சேதம் அடைந்தன.

நிலநடுக்கம் காரணமாக மலைப் பிரதேசங்களில் ஆங்காங்கே கடும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்று மெக்சிக்கோ பேரிடர் மீட்புக் குழு தெரிவித்தது. 2017 ஆம் ஆண்டில் மெக்சிக்கோவில் இரண்டு வாரங்களுக்குள் இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டு அவற்றில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சி தலைவர் கைது தான்சானியா அரசு அதிரடி!

சட்டவிரோத சட்டசபை நடத்தினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் தான்சானியா நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர் ஜிட்டோ கப்வே உட்பட எட்டு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கின்ற நிலையில் நடந்த இந்தச் சம்பவமானது தான்சானியா அரசின் அடக்குமுறையைக் காட்டுகின்றது என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இரண்டாவது தடவையாகவும், இறுதித் தடவையாகவும் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்துக்கு ஜனாதிபதிப் பதவியில் இருப்பதற்காகப் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படும் தற்போதைய ஜனாதிபதி ஜோன் மகுஃபுலி, தேர்தலுக்கு முன்னதாகக் கடந்த வாரம் அந்த நாட்டு நாடாளுமன்றத்தை கலைத்திருந்த நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.



# படை நடவடிக்கை நிறுத்தம் வடகொரியா திடீர் திருப்பம்

தென்கொரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு வட கொரியா முடிவு செய்துள்ளதாக வட கொரிய அரச ஊடகங்கள் தெரிவித்தன.

வட கொரியாவின் இந்த முடிவுக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. கடந்த வாரம் எல்லைப் பகுதியிலுள்ள தொடர்பு அலுவலகத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததுடன், தென்கொரியாவுடனான தொடர்புகளையும் அது துண்டித்திருந்த நிலையில் எல்லையில் இராணுவத்தைக் குவித்துப் படை நடவடிக்கைகளுக்கும் தயாராகி வந்தது. இந்த நிலையிலேயே அதன் படை நடவடிக்கைகளை அது நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை வட கொரியாவின் ஆளும் கட்சியின் மத்திய இராணுவ ஆணையகத்தின் காணொலி மாநாட்டுக் கூட்டத்துக்குத் வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன் தலைமை தாங்கினார் என்றும் அப்போது இராணுவத் திட்டங்களை இடைநிறுத்த முடிவு செய்வதற்கு முன்னர் உறுப்பினர்களிடம் எல்லையில் நிலவும் சூழ்நிலையைப் பற்றிக் கேட்டுக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வட கொரியாவின் இராணுவம் எல்லையில் இருந்த 10 ஒலிபெருக்கிகளை அகற்றுவதைக் காண முடிந்ததாகவும் தற்போது சில சாதனங்களை மீண்டும் அங்கு நிறுவியுள்ளதாகவும் தென் கொரியா தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.



# தடைகளை தளர்த்துகிறது தாய்வான்

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கிலிருந்து வெளியேறித் தமது நாட்டுக்குள் நுழைய முற்படுகின்ற மக்களுக்காகத் தனது எல்லைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதாக அறிவித்தது தாய்வான்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக எல்லைக் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கியிருந்த தாய்வான் அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதாகத் தெரிவித்தது. சீனாவின் ஹொங்கொங் நகரத்திலிருந்து வெளியேற விரும்பும் மக்களுக்கு உதவுவதற்காக அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்குத் தாய்வான் உத்தேசித்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில் தாய்வான் தனது எல்லைகளை மூடியது. சீனாவின் அடக்குமுறை காரணமாகக் ஹொங்கொங்கிலிருந்து தாய்வானுக்கு வரவிரும்புபவர்களுக்கு அது தடையாக இருக்கும் என்று தெரிவித்தே எல்லைத் தடைகளைத் தளர்த்துவதாக அறிவித்துள்ளது தாய்வான்.

# எம்மவர்களின் சடலங்களை நாமே தூக்கி கடலில் வீசினோம்!

## ரோஹிங்கியா அகதிகள் உருக்கம்



நான்கு மாதங்கள் வரை தாம் கடலில் தத்தளித்தனர் என்றும் தம்முடன் பயணித்த பலர் படகில் உயிரிழந்தனர் என்றும் அவர்களது சடலங்களைக் கடலில் தூக்கி வீசினோம் என்றும் ரோஹிங்கிய அகதிகள் தெரிவித்தனர்.

மலேசியப் பொலிஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட படகில் மியன்மாரைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் இருந்தனர். அவர்கள் தரப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 8ஆம் திகதியன்று மலேசியத் தீவான லங்காவிக் கடற்பகுதியில் தவித்த இந்த அகதிகளை மீட்ட மலேசிய கடல்சார் நடைமுறையாக்க முகமையின் தலைவரான ஜெனரல் மொஹட் ஜூபில் பின் மாட் சோம் என்பவரும் ரோஹிங்கிய முஸ்லிம்கள் இந்தக் கடல் பயணத்தின்போது சந்தித்த சோதனையை விவரித்தார், சேதமடைந்த அந்தப் படகிலிருந்து தமது படகுக்கு 300 க்கும் மேற்பட்ட ரோஹிங்கியாக்கள் மாற்றப்பட்டதாகவும், அவர்களில் சிலர் கடலில் இறந்து கடலிலேயே வீசப்பட்டனர் என்றும் கூறினார். இறந்தவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள் என்றும் அவர் தெரிவித்தார். குறித்த அகதிகளை மீண்டும் கடலுக்குள் விடுவதற்கு மலேசிய அரசு முடிவெடுக்கின்றது என்று வெளியான செய்தி குறித்து அவரிடம் கேட்டபோது, இது மனித உரிமை குழுக்களால் விமர்சிக்கப்பட்ட கருத்து என்று அவர் பதிலளித்தார்.

# மாமனிதர் ரவிராஜ் குறித்து

## மனோ கணேசனின் மனப் பகிர்வு



**மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்களின் பிறந்த தினம் அதையொட்டி முன்னாள் அமைச்சர் மனோ கணேசனின் மனப் பகிர்வு இங்கு இடம்பெறுகின்றது.**

நடராஜா ரவிராஜ் என்ற எனது நண்பன். நண்பன் ரவிராஜ் உயிருடன் இல்லையே எனத் திடீர் திடீரென நான் நினைத்துக் கொள்வேன்.

ரவி சுட்டுகொல்லப்பட்ட அந்த 2006 நவம்பர் ஒன்பதாம் திகதி, என் மனதில் எப்பொழுதும் இன்று காலையில் நடந்தது போல பதிந்திருக்கிறது.

காலையில் செய்தி கேட்டவுடன், தொலைபேசியில் அவரது வீட்டு பணிப்பெண் அழுது குழறிய, சில நிமிடங்களிலேயே, அடித்து பிடித்துகொண்டு, கொழும்பு பொது மருத்துமனைக்கு ஓடோடி சென்றேன். அங்கு அப்போது ஒருவரும் இருக்கவில்லை.

என்னைக்கண்ட மருத்துவமனை பிரதம அத்தியட்சகர் என்னை அழைத்து சென்று ஒரு அறையில் கைகாட்டி விட்டார். அங்கே ஒரு பலகை கட்டிலின் மீது என் நண்பன் ரவி படுத்து இருந்தார்.

“என்ன, இங்கே? அதிதீவிர சிகிச்சை பிரிவில் (ICU) இல்லையா?” - என்று பதைபதைப்புடன் நாக்குழற நான் கேட்ட போது, “இல்லை, ஹொனரபல் கணேசன், ஹொன ரபல் ரவிராஜ் இறந்துவிட்டார்” - என்று அத்தியட்சகர் அமைதியாகச் சொன்னார்.

மின்னல் தாக்கியது போல் இருந்தது. அருகில் சென்று தொட்டு பார்த்தபோது உடலில் சூடு அப்படியே இருந்தது. முகத்தில் ரவியின் வழமையான அந்த மர்ம புன்னகையும் தெரிந்தது. நான் சற்றுக் குனிந்து துப்பாக்கி சூட்டினால் இரத்தம் வழிந்திருக்குமா, காயம் பட்டிருக்குமா என தேடினேன். அப்படியெதுவும் அங்கே தெரியவில்லை. இரத்தமும் இருக்கவில்லை. ஒருவேளை இரத்தத்தை துடைத்துவிட்டார்களோ தெரியவில்லை.

நான் கேட்காமலே, நான் என்ன பார்க்கிறேன் என்பதை உணர்ந்து, அத்தியட்சகர் என் பக்கத்தில் வந்து, ரவியின் தலையில், இடது புறம் என நினைக்கிறேன், இருந்த சிறிய ஒரு புள்ளியை காட்டினார். துப்பாக்கிச் சன்னம் இதில்தான் நுழைந்துள்ளது என்று சொன்னார்.

வார்த்தைகளில் சொல்ல முடியாத ஒருவித வெறுமை உணர்வுடன் நான் வெளியில் வந்தபோது, அப்போது தான் ஊடகவியலாளர்களும், தொடர்ந்து அலறலுடன் ரவியின் தாய், மனைவி, மகள், வேறு பல அரசியல்வாதிகளும் வர தொடங்கினார்கள்.

எனக்கு சட்டெனெ ஓர் உண்மை உறைத்தது.

ஓர் அரசியல் தலைவர், அவர் வாழ்நாளில், மக்களுக்காக வாழ்ந்து, மக்கள் சார்பில் குரல் எழுப்பி, போராடி, மக்களுக்காக உயிர் இழக்கிறார். அதன் பின்தான், வாழ்நாளில் அந்த மாமனிதரை முழுமையாக உணர்ந்திருக்காத அரசியலர், சமூக, முன்னோடிகள், பாமரர்கள் உள்ளிட்ட பெருந்திரளினர் என அனைவரும் அந்த இழப்பை முழுமையாக உணருகிறார்கள். அதுவும் அந்த மரணம் இப்படி கொடுமையாக நிகழும் போது, அது தாங்க முடியாததாக மாறுகிறது.

ரவியின் வாழ்வும் இப்படிதான். அவரின் மறைவுக்கு பிறகு மறைந்த தலைவருக்கு அஞ்சலி கூட்டங்கள் நடத்தி, இறப்புக்கு பின்னரான பட்டங்கள் வழங்கி, இனம் வருந்தி வணங்குகிறது. யாரையும் குறை சொள்ளவதற்கில்லை. இதுதான் உலக இயல்பு.

ஆனால், அந்த இறப்பு நேரடியாக அவரது குடும்பத்தால்தான் உணரப்படுகிறது. அன்று அங்கே கொழும்பு பொது மருத்துமனை வாசலில், ரவியின் மனைவியும், மகளும், தாயும் கதறி அழுததை பார்க்கும் போது, மனது ரொம்பவும் வெறுமையாகியது.

தாய் என் கையை பிடித்துகொண்டு கதறிய படம் ஊடகங்களில் வெளியாகி தமிழர் மற்றும் ரவியை மதித்த சிங்கள நண்பர்களின் மனங்களை உருக்கியது. ரவியின் மகள் எனது ஞாபகத்தின்படி, ஒரு சிறுமியாக பாடசாலை சீருடையில் பாடசாலையில் இருந்து அப்படியே அழைத்து வரப்பட்டார் என எண்ணுகிறேன்.

இன்று, திருமதி. சசிகலா ரவிராஜ் தேர்தலில் போட்டியிடுகிறார் என நினைக்கிறேன். அன்று அவர் அரசியல்வாதி அல்லர். அவர் அன்று அரசியலை நினைத்துக் கூடப் பார்த்திருப்பார் என எனக்குத் தோன்றவில்லை. ஒரு கல்லூரி ஆசிரியராகவும், வீட்டு மனையாளாகவுமே இருந்தார் என நினைக்கிறேன். அன்றைய தினம் அவர் அதிர்ச்சியில் உறைந்து போய் இருந்தார். அவர் முகத்தை பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

பிறகு ஒரு பெரும் இறுதி ஊர்வலத்தையும், அஞ்சலி கூட்டம் ஒன்றை விஹாரமகாதேவி பூங்காவிலும் நான், ராஜித உள்ளிட்டோர் நடத்தினோம். அதற்கும் அரசாங்கம் பொலிஸ் ரூபத்தில் பல தடங்கல்களை போட்டது. இப்போது சிக்கலில் மாட்டி இருக்கும் பூஜித ஜயசுந்தரதான் கொழும்பு டிஐஜியாக இருந்தார். சண்டை போட்டு, போட்டு, நிகழ்வை நடத்தினோம். தமிழர்களை விட, சிங்களவர்கள்தான் அதிகம் வந்திருந்தார்கள். அது ஒரு தனி அத்தியாயம்.

நான் யாழ்ப்பாணத்தில் பிறக்கவில்லை. ரவி



கொழும்பில் பிறக்கவில்லை. ஆனால், நாம் இருவரும் பதவிகளை கொண்டு வரும் தேர்தல் அரசியலுக்கு அப்பாலும் மிக நெருங்கிய நண்பர்கள். அதனால்தான், சுகமான அரசியல் செய்யும் இன்றைய நாள்களைப் போன்று அல்லாத, அந்த நெருக்கடியான நாள்களில் மரணம் தேடி வரும் என்று தெரிந்திருந்தும் நாம் இருவரும் மக்கள் கண்காணிப்பு குழுவை அமைத்து, தேர்தல் அரசியலுக்கு அப்பால், மனித உரிமை பாதையில் வெகுதூரம் சென்றோம்.

ரவி இறந்தபிறகு, யுத்தமும் முடிந்த பிறகு சில வருடங்களுக்கு நவம்பரின் ரவி கொல்லப்பட்ட தினத்தில் நான் ரவியின் நினைவாக கூட்டங்கள் நடத்தி வந்தேன். அந்த நினைவு கூட்டங்களில் நானும், ரவியை அறிந்த சிலரும் உரையாற்றுவோம். சில வருடங்களுக்கு பிறகு அந்த நினைவு கூட்டங்களை நடத்துவதை விட்டுவிட்டேன். அந்த கூட்டங்கள் மிகவும் சம்பிரதாயபூர்வமான அரசியல் கூட்டங்களாக மாறின.

இறந்துபோன ஒரு அரசியல் தலைவரது ஞாபகார்த்த கூட்டங்கள் இப்படித்தான் நடக்கும். ஆகவே இந்த அரசியல் சம்பிரதாயங்களில் எந்த தவறும் கிடையாது. ஆனால் எனக்கு ரவியை பற்றி பேசும்பொழுதெல்லாம் மருத்துவமனையின் பிண அறையில் ஒரு மேசையின் மீது கிடத்தப்பட்டிருந்த ரவியின் உடலும், அந்த உடல் சூடும், அந்த முகத்தில் இருந்த மர்ம புன்னகையும், துப்பாக்கி தோட்டா துளைத்த அவரின் தலையில் இருந்த சிறு புள்ளியும் தான் ஞாபகத்திற்கு வரும். ஆகவே சம்பிரதாய கூட்டங்களில், குறிப்பாக ரவிராஜ் தொடர்பான கூட்டத்தில் எனக்கு இயல்பாக கலந்துகொள்ள முடியாமல் போனது.

மக்கள் கண்காணிப்பு குழுவை நடத்திக்கொண்டிருந்த பொழுது இத்தகைய கொலை முயற்சி எங்கள் மீது பல சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்பட இருந்தமை எனக்கு தெரியும். ஒருமுறை நானும், ரவியும் களுத்துறையில் ராஜித சேனாரத்ன ஏற்பாடு செய்திருந்த யுத்த எதிர்ப்பு கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்கு கொழும்பில் இருந்து சென்றோம். ரவி அப்பொழுது தான் புதிதாக ஒரு ஜீப் வண்டி வாங்கி இருந்தார். புது மெருகுடன் அந்த வண்டி இருந்தது. கொழும்பில் இருந்து புறப்பட்ட பொழுது அவர் கேட்டுக்கொண்டதால், நான் அவர் வண்டியில் ஏறிக்கொண்டேன். பின்னால் வந்த எனது வண்டியிலே எனது பாதுகாப்பு அதிகாரிகளும், ரவியின் அதிகாரிகளும் ஏறிக்கொண்டார்கள்.

நானும், ரவியும் தனியாக அவரது வண்டியிலே சென்றோம். ரவி தான் ஓட்டினார். களுத்துறை நகர சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு, விக்கிரமபாகு கருணாரத்னவும், மக்கள் கண்காணிப்பு குழுவின் செயலாளர் பிரியாணி குணரட்னவும் எங்களுக்கு முன்னரே சென்றிருந்தார்கள்.

களுத்துறையை நெருங்கிக்கொண்டிருந்த பொழுது பிரியாணியிடம் இருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. கூட்டம் நடைபெறவிருந்த அந்த மண்டபத்தின் மேடையிலே திரை சீலைக்கு பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு நபரை ராஜித சேனாரத்னவின் பாதுகாப்பு அலுவலர்கள் பிடித்து விசாரிப்பதாகவும், அந்த நபருக்கும் கூட்டத்திற்கும் தொடர்பில்லை என தகவல் வெளியாகி இருப்பதாகவும் பிரியாணி சொன்னார்.

அதற்குள் எங்களுக்கு பின்னால் வந்துகொண்டிருந்த எனது வண்டி வேகமாக எங்களை கடந்து வந்து முன்னாள் நின்றது. அதிலிருந்து எனது பாதுகாப்பு அதிகாரி வேகமாக ஓடி வந்தார்.

சார், களுத்துறை மண்டபத்திலே ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சந்தேக நபர் ஒருவரை பிடித்திருக்கிறார்கள் என்று சொன்னார்.

ஆம். அது எனக்கு தெரியும். என்று சொன்னேன்..

சார், நாங்கள் இந்த நிகழ்ச்சியை ரத்து செய்தால் என்ன? என்று அவர் கேட்டார்.

அதற்கு நானும், ரவியும் உடன்படவில்லை.

உடனே எனது வாகனத்தில் இருந்த இரண்டு அதிகாரிகளை நான் பயணித்த ரவியின் வாகனத்தில் ஏற்றிவிட்டு நீங்கள் மெதுவாக வாருங்கள். நாங்கள் வேகமாக சென்று அந்த மண்டபத்தை பரிசோதிக்கிறோம்”, என்று கூறிவிட்டு முன்னாள் இருந்த எனது வாகனத்திலேயே வேகமாக அவர்கள் சென்றுவிட்டார்கள்.

நானும், ரவியும், ரவியின் வாகனத்தில் இரண்டு அதிகாரிகளுடன் மெதுவாக சென்றோம். சிறிது நேரத்தில் பிரியாணியிடம் இருந்து மீண்டும் ஓர் அழைப்பு வந்தது. பிடிபட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு துப்பாக்கி

> ஓர் அரசியல் தலைவர், அவர் வாழ்நாளில், மக்களுக்காக வாழ்ந்து, மக்கள் சார்பில் குரல் எழுப்பி, போராடி, மக்களுக்காக உயிர் இழக்கிறார். அதன் பின்தான், வாழ்நாளில் அந்த மாமனிதரை முழுமையாக உணர்ந்திருக்காத அரசியலர், சமூக, முன்னோடிகள், பாமரர்கள் உள்ளிட்ட பெருந்திரளினர் என அனைவரும் அந்த இழப்பை முழுமையாக உணருகிறார்கள்.

கைப்பற்றப்பட்டதாகவும், அவரை களுத்துறை பொலிஸ் அலுவலர்கள் வந்து கைதுசெய்து கொண்டு சென்றுவிட்டனர் எனவும் கூறினார். மேலும் கூட்டத்திற்கு வந்திருந்த சனத்தில் பாதிப்பேர் பதற்றத்திலேயே சென்றுவிட்டனர் எனவும், ஒரு சிலரே இருக்கின்றனர் எனவும், ஆனால் கூட்டத்தை கட்டாயம் நடத்தியே தீரவேண்டும் என ராஜிதவும், விக்ரமபாகுவும் சொல்கின்றனர் எனவும் பிரியாணி சொன்னார்.

கூட்டத்தை நடத்துவோம், நாங்களும் வருகின்றோம் என சொன்னேன்.

(10 பக்கம் பார்க்க)

# 60 குடும்பங்களுக்கான பால்மா உலர் உணவுப் பொருள் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்தினால் 60 குடும்பங்களுக்கான பால்மா மற்றும் உலர் உணவுப் பொதிகளும் சிறுவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் முழு உலகமே முடக்கப்பட்ட வேளையில் நாட்டு மக்கள் பல சவால்களை எதிர்கொண்டு இருந்தார்கள் . ஊரடங்கு நீக்கப்பட்ட வேளையிலும் வடக்கு மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்புற்று உள்ள நிலையில்,

யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்தால் பல்வேறுபட்ட நிவாரணப் பணிகள் கட்டம் கட்டமாக வடக்கு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அவ் வகையில் 40 ஆவது கொரோனா நிவாரணப் பணியாக கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்டம் நாச்சிகுடா பிரதேசம் வேளாங்கன்னி கிராமத்தில் அமைந்துள்ள நெய்தல் முத்துக்கள் சிறுவர் கழகத்தில் கல்வி பயிலும் 70 சிறுவர்களை கொண்ட 60 குடும்பங்களுக்கு கே.கே.பி. இளைஞர் கழகத்தினால் சுகாதாரமான முறையில் உலர் உணவுப்பொதிகளும் சிறுவர்களுக்கு மதிய உணவும் சமூக சேவையாளரான ஐது வழங்கிய நிதிப் பங்களிப்பின் மூலம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்விலே இலங்கை இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர்



கழக தலைவருமான சந்தோஷ் மற்றும் சமூக சேவையாளர் கலாநிதி சுதாகரன், சமூக சேவையாளர் அலன் மற்றும் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.





# கடந்த ஐந்து வருட காலத்தில் சீரழிக்கப்பட்ட கிளிநொச்சியைச் சீரமைக்க வாக்களியுங்கள்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கோரிக்கை





கிளிநொச்சி,ஜூன்25

கிளிநொச்சி மாவட்ட என்றுமில்லாதவாறு கடந்த ஐந்து வருடத்திற்குள் சீரழிக்கப்பட்டுள்ளது. கல்வி, பொருளாதாரம், உட்கட்டமைப்பு, சுற்றுச் சூழல், இளம் சமூகத்தின் வாழ்க்கை என அனைத்துத் துறைகளிலும் மாவட்டம் மிக மோசமாக சீரழிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடத்தில் இந்த மாவட்டத்தில் அதிகாரத்தில் இருந்த அரசியல் தரப்பும், அதிகார தரப்புமே இதற்குக் காரணம்.

எனவே இதனைச் சீரமைத்து கிளிநொச்சி மாவட்டத்தை மறுசீரமைக்க இந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் என கேடயச் சின்னத்தில் சுயேச்சைக் குழு ஐந்தில் தேர்தலில் போட்டியிடுகின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கள் கிழமை கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 தொடக்கம் 2020 வரை இந்த மாவட்டத்தில் அதிகாரத்தில் இருந்த அரசியல் மற்றும் அதிகாரத் தரப்பினர் மாவட்டத்தைக் குட்டிச் சுவராக்கிவிட்டனர். மிக மோசமான சீரழிவுக்குக் கொண்டு சென்றுள்ளனர். எங்கும் ஊழல், இலஞ்சம் நிறைந்து காணப்படுகிறது. பிரதேச சபைகள் ஊழல், முறைகேடுகள் நிறைந்த சபைகளாக விளங்குகின்றன. இதனை நான் வெறும் வார்த்தைகளில் விமர்சிக்கவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெறப்பட்ட ஆதாரங்களை கொண்டே கூறுகிறேன். பல ஊழல்கள்,முறைகேடுகள் கணக்காய்வு அலுவலகத்தின் விசாரணை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கைகளை கையில் வைத்துக்கொண்டே கூறுகின்றேன். கம்பெரலிய உட்பட கடந்த ஐந்து வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்திகள் தற்போது பயனற்றுக் கிடக்கின்றன. செய்யாத பணிகளுக்கு பணத்தை முறைகேடாக பெற்றுள்ளனர். இப்படி ஏராளமானவற்றை ஆதாரத்துடன் கூறிக்கொண்டே போகலாம்

இளைஞர், யுவதிகள் தொழிலின்றித் தவிக்கின்றனர். அவர்களது எதிர்காலத்தை கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காதவர்கள் தங்களின் பரம்பரைக்குக் காணிகள், வீடுகள் எனப் பெரும் சொத்துகளை வாங்கிக் குவித்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கைவளம் கிளிநொச்சி தமிழரசு கட்சியின் அமைப்பாளர்கள், கிராம மட்ட செயற்பாட்டாளர்களால் மிக மோசமாக சுரண்டப்பட்டுவருகிறது. அதிகாரத்தில் இருந்தவர்கள் இதனைக் கண்டுகொள்ளவில்லை. மாறாக அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து சமூகவிரோதிகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

கிளிநொச்சி கல்வியில் இலங்கையின் கடைசி மாவட்டம், வறுமையில் முதல் மாவட்டம். இப்படி பல துறைகளில் மாவட்டத்தை சீரழித்தவர்கள் மீண்டும் மக்கள் முன் வெட்கமின்றி உணர்ச்சி பேச்சுக்களைப் பேசி வாக்குக் கேட்டு வருகின்றனர். தூரநோக்கு அல்ல, கிட்ட நோக்குக் கூட இல்லாதவர்கள் கடந்த ஐந்து வருடத்தில் மாவட்டத்தைச் சீரழித்துவிட்டனர். எனவே கிளிநொச்சி மாவட்ட மக்கள் இவர்களுக்கு இந்தத் தேர்தலில் தக்க பாடம் புகட்ட வேண்டும். பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து மாவட்டத்தை சீரமைக்க வழி வகுக்க வேண்டும். - எனத் தெரிவித்தார்.

# சுமார் 2 ஆயிரத்து ஐந்நூறு வாக்காளர்கள் மன்னாரில் இருந்து புத்தளத்துக்கு மாற்றம்

மன்னாரில் இருந்து சுமார் 2 ஆயிரத்து 500 வாக்காளர்கள் புத்தளம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் நிரந்தர வதிவிடங்களைக் கொண்டவர்களின் பெயர்கள் மன்னாரில் இருந்த புத்தளம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது மன்னாரில் சுமார் 2 ஆயிரத்து 500 வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னாயத்தம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெயிக்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

ஊடகவியலாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு இடையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில -

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 88 ஆயிரத்து 842 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். தபால்மூல வாக்களிப்பைப் பொறுத்தவகையில் 4 ஆயிரத்து 255 வாக்களிப்பு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 59 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 4 ஆயிரத்து 196 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். தபால்மூல வாக்களிப்பிற்கான விநியோகம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இம்முறை தேர்தலில் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது சுமார் 2 , 500 வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதற்கான காரணம் புத்தளம் மாவட்டத்தில் நிரந்தர வதிவிடங்களைக் கொண்டவர்களின் பெயர்கள் இங்கிருந்து புத்தளம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டமைதான்.

இதேவேளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மன்னார் மாவட்டத்தில் நீதியானதும் நேர்மையானதும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியதுமாக நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன்படி மன்னார் மாவட்டத்திற்கான மத்திய முறைப்பாட்டு நிலையம் இயங்கி வருகின்றது. குறித்த முறைப்பாட்டு நிலையத்துடன் 023 - 2223820 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம். அதற்குப் பொறுப்பாக மன்னார் மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் எல்.ஜே.றொகான் குரூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைவிட நேரடியாக தேசிய தேர்தல் முறைப்பாட்டு நிலையத்திலும் தங்களுடைய முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும். அல்லது 011-2886179 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் முறைப்பாடு செய்யமுடியும்.

இதேவேளை தற்போது தேர்தல் பிரசார அலுவலகங்கள் மாவட்ட மட்டத்தில் திறக்கப்பட்டு வருகின்றன. அதற்கான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டு வருகின்றது. இம்முறை அனுமதி வழங்கப்படும்போது பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக வழங்கப்படுமெனவும் தெரிவித்தார் .

# பத்து நாய்கள் ஒரேயடியாக மரணம்

கலேவேலா, அலுத்வேவா பகுதியில் நேற்று திடீரென பத்து நாய்கள் இறந்து கிடக்கக் காணப்பட்டமையினால் அப் பிரதேச மக்களிடையே பதற்றமான நிலைமை காணப்பட்டது.

அலுத்வேவா பகுதியில் பல்வேறு இடங்களில் நாய்கள் இறந்து கிடப்பதனை பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரின் அவசர இலக்கத்திற்கு பிரதேசவாசிகளினால் அழைப்பு எடுக்கப்பட்டதை அடுத்து கலேவேலா பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்

விம் கலந்த உணவுகளை உண்டதால் நாய்கள் இறந்திருக்கலாம் என்ற கோணத்தில் கலேவேலா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரத்தியேக வகுப்புக்கள்

**தமிழ் வகுப்புக்கள் தரம் 6 - 11 வரை வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். வரலாறு, புவியியல், குடியுரிமை பாடங்களும் கற்பிக்கப்படும்.**

ஆசிரியர்:- K.குகன்

076 454 5709

காலைக்கதிர் Kalaikkathir

# தரிஷா பஸ்டியனின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் இலங்கை

## 5 சர்வதேச அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25

ஊடகவியலாளரும் மனித உரிமை பாதுகாவலருமான தரிஷா பஸ்டியனின் பாதுகாப்பை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என 5 சர்வதேச அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.



ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட 5 சர்வதேச அமைப்புகளே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

தரிா பஸ்டியனுக்கு எதிரான நடவடிக்கைகள் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல் எனக் குறிப்பிட்டுள்ள இந்த அமைப்புகள், தரிா பஸ்டியனை துன்புறுத்துவதை நிறுத்தி அவரது பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

சுவிஸ்தூதரகப்பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக இலங்கை அரசு முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கும் விசாரணைகளில் சி.ஐ.டியினர் தரிா பஸ்டியனைத் தொடர்ந்து இலக்குவைக்கின்றனர் என சர்வதேச அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் 2019 டிசம்பர் முதல் சி.ஐ.டியினர் தரிஷா பஸ்டியனையும் வேறு பலரையும் சுவிஸ் தூதரகப் பணியாளரின் போலியான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையில் தொடர்புபடுத்த முயன்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ள சர்வதேச அமைப்புகள், சதி முயற்சி இடம்பெற்றதாகக் காண்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனபோல் தோன்றுகின்றது எனவும் தெரிவித்துள்ளன.

அரச ஊடகங்கள் தரிசா பஸ்டியனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராகத் திட்டமிட்ட பிரசாரத்தை முன்னெடுத்துள்ளன என்றும், சமூக ஊடகங்களில் அவரைத் துரோகி மற்றும் குற்றவாளி என முத்திரை குத்தும் பிரசாரங்களும் இடம்பெறுகின்றன எனவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தரிஷா பஸ்டியன் சண்டே ஒப்சேவரின் ஆசிரியராகப் பணியாற்றியவர். நியூயோர்க் டைம்சிற்கும் பங்களிப்பு செய்பவர். மனித உரிமைகள், இராணுவ மயமாக்கல், ஊழல், மதச் சுதந்திரம், ஜனநாயகம், அரசியல் உரிமைகள் போன்ற இலங்கையுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து அவர் எழுதியுள்ளார் எனத் தெரிவித்துள்ள சர்வதேச அமைப்புகள், அவரது எழுத்துகள் தொடர்ச்சியான ஆட்சியாளர்களினால் இலக்குவைக்கப்படும் மக்களின் போராட்டங்களை வெளிக்கொண்டு வந்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளன.

குறிப்பாக இன, மத சிறுபான்மையினரின் நெருக்கடிகளை வெளிக்கொண்டு வந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளன.

தரிா பஸ்டியனின் பத்திரிகை பணி காரணமாக அவரும் அவரது குடும்பத்தினரும் இலக்கு வைக்கப்படுவது இது முதல் தடவையல்ல எனத் தெரிவித்துள்ள சர்வதேச அமைப்புகள், அவர் இலங்கையில் பலவந்தமாகக் காணாமல்போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான போராட்டம் குறித்து எழுதியுள்ளார் எனவும் மேலும் தெரிவித்துள்ளன.

# மாமனிதர் ரவிராஜ் குறித்து...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு கூட்டம் நடந்தது. நாங்கள் எல்லோரும் பேசினோம். கூட்டம் முடிவடைந்த பின் நாங்கள் களுத்துறை பொலிஸ் நிலையத்திற்குச் செல்லத் தீர்மானித்து, ராஜிதவின் அதிகாரிகள் களுத்துறை பொலிஸ் அறிவித்தார்கள். அப்பொழுது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், மேலிடத்தில் இருந்து வந்த உத்தரவு காரணமாக அந்த சந்தேக நபரை பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பிவிட்டனர் எனக் கூறினர். ஆகவே நாங்கள் களுத்துறை பொலிஸ் நிலையத்திற்குச் செல்லவில்லை.

அன்று கைதுசெய்யப்பட்ட அந்த சந்தேக நபர் பற்றி அதற்கு பிறகு தகவல் ஏதும் கிடைக்கவில்லை. அவர் எங்கே போனார் என்றும் தெரியவில்லை. அவரை பற்றிய பதிவுகளும் இல்லாமல் போய்விட்டன. அங்கே எம்மில் எவரோ கொலை செய்யப்படுவதற்கு நடந்த முயற்சி என நாம் ஊகித்துக்கொண்டோம். அவ்வளவுதான்.

அன்று நானும், ரவியும் பயணித்த ரவிராஜின் அந்த புதிய வாகனத்தில்தான் நாரஹேன்பிட்ட எல்விட்டிகல மாவத்தை, அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் சில தினங்களுக்கு பிறகு ரவிராஜ் சுட்டு கொல்லப்பட்டார். சுட்டு கொல்லப்பட்ட போதும் கூட அவரது வாகனத்தை அவர்தான் ஓட்டிக்கொண்டு இருந்தார். அவர் அருகில் அமர்ந்திருந்த அவரது சிங்கள பொலிஸ் அதிகாரி ஒருவரும் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டார்.

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், பொதுவாக சொல்லப்படுவதை போல, அரசு பயங்கரவாதம் என்பது ஒட்டு மொத்த படைத்தரப்பையும் முழுமையாக தழுவியது அல்ல. ஆங்காங்கே சில கொலைக் குழுக்களை, கடத்தல் குழுக்களை, சித்திரவதைக் குழுக்களை அரசியல் தலைமை தமது தேவைகளுக்காக அமைத்துப் பயன்படுத்தியது.

இத்தகைய தந்திரமான அரச பயங்கரவாத சூழல் பற்றி அவ்வேளையில் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த நான், ரவி, ராஜித, விக்கிரமபாகு, சிறிதுங்க, பிரியாணி ஆகியோர் அறிந்துதான் இருந்தோம். ஆகவே எங்கள் போராட்ட பணிகளை நிறுத்தாமல் நடத்தினாலும் கூட எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும் என நாங்கள் தீர்மானித்தோம்.

ஆனால் ரவி எச்சரிக்கையாக இருப்பதில் சிரத்தை காட்டவில்லை என்பதை நான் அறிந்தே இருந்தேன். கொழும்பு ஹவ்லொக் வீதியில் பயணிப்பவர்களுக்கு பார்க் ரோட் சந்தியை ஒட்டி அமைந்திருந்த சிறுவர் பூங்காவும், BRC விளையாட்டு கழக திடலும் அமைந்திருக்கும் பிரதேசம் நன்கு தெரிந்திருக்கும். அங்கே ஹவ்லொக் வீதியை ஒட்டி நடைபாதை ஓரமாக இன்னொரு சிறிய சாமாந்திர வீதியும் இருக்கும். அந்த இடத்திலே பாரம்பரியமாக ஒரு சிங்கள வியாபாரி கொழும்பு புறநகர் கிராமத்தில் இருந்து வந்து செவ்விளநீர் விற்றுக் கொண்டு இருப்பார்.

இந்த மாதிரி அச்சுறுத்தல் நிரம்பிய காலகட்டத்திலே ஒரு நாள் நான் எனது பாமன்கடை வீட்டில் இருந்து ஹவ்லொக் வீதியிலே வேகமாக வண்டியிலே சென்ற பொழுது, அந்த இளநீர் விற்பவருக்கு பக்கத்திலே வாகனத்தை நிறுத்தி, கீழே இறங்கி ரவிராஜும், அவரது காவலர்களும் இளநீர் அருந்தியபடி சிரித்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

உடனடியாக எனது வாகனத்தை திருப்பி அந்த இடத்திற்கு போகும்படி எனது சாரதியிடம் கூறினேன். எனது வாகனம் யூ டர்ன் அடித்து வேகமாக வந்து ரவியின் வாகனத்திற்கு பின் நின்றது. நானும் எனது காவலர்களும் வருவதை கண்ட இளநீர் காரர் தனக்கு வாடிக்கையாளர்கள் அதிகரிக்கிறார்கள் என சந்தோசப்பட்டு எங்களை பார்த்தார்.

அங்கே சென்ற நான் ரவியை கடுமையாக கண்டித்தேன். இப்படியான பகிரங்க இடங்களில் தனியாக நிற்க வேண்டாம் எனச் சொன்னேன். தாங்கள் பாதுகாக்க வேண்டிய வீஜபீயை பகிரங்க தெருவோரத்தில் நிறுத்தி சாவகாசமாக இளநீர் குடித்துக்கொண்டிருந்த ரவியின் பாதுகாப்பு அதிகாரிகளையும் நான் கடுமையாக திட்டினேன். உங்களுக்கு மூளை இல்லையா? என நான் சிங்களத்தில் கேட்டது ஞாபகம் இருக்கிறது.

எனது பாதுகாப்பு அதிகாரி பொலிஸ் தராதரத்தில் அவர்களை விட உயர் அதிகாரி. அவரும் ரவியின் பாதுகாவலர்களை கடுமையாக திட்டினார்.

இளநீரை குடித்தது குடித்தபடி அப்படியே விட்டுவிட்டு, ரவியையும் அவரது பாதுகாவலர்களையும் அங்கிருந்து வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு, நான் போனேன். இந்த சம்பவம் எனக்கு நன்கு ஞாபகம் இருக்கின்றது.

இந்த சம்பவமும், களுத்துறை சம்பவமும் நிகழ்ந்த சில நாள்களுக்குப் பிறகு தான் ரவியின் ஏற்பாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்பு ஐ.நா. வளாகத்திற்கு முன்னாலே ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதை அடுத்துத் தான் ரவி கொல்லப்பட்டார்.

உலக சமுதாயத்தின் கொழும்பு முகவரியான ஐ.நா. அலுவலக வாசலில் நின்று, ஒரு நாட்டில் ஒடுக்கப்படும் இனத்தை பிரதிநிதித்துவம் செய்யும், ஒரு ஜனநாயக கட்சியின் எம்.பிக்கள் ஜனநாயக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அதற்கடுத்த நாள் அதில் ஒரு எம்.பி. சுட்டுக்கொல்லப்படுகிறார். இதுபற்றி ஐ.நா. ஒன்றும் பெரிதாக ஆர்ப்பரிக்கவில்லை. இதன் பிறகு எனக்கு சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கை குறைய தொடங்கியது.

# சுற்றுலா சென்றுள்ள இளைஞன் நீர்த் தடாகத்தில் மூழ்கிச் சாவு

## வெள்ளவாயாப் பகுதியில் சம்பவம்

உள்நாட்டு உல்லாச பயணிகள் குழுவொன்று, நீர்வீழ்ச்சியொன்றில் குளித்துக் கொண்டிருந்தபோது, இளைஞனொருவர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் வெள்ளவாயாப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவைச் சேர்ந்த தம்பிதுரை ரவிகரன் என்ற 22 வயது இளைஞனே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமானவராவார்.


இவ் இளைஞன் வெலிமடையின் தனியார் நிறுவனமொன்றில் தொழில் செய்துவந்துள்ளார். அந் நிறுவனத்தின் இவ் இளைஞர் உட்பட ஏனைய இளைஞர்கள் 9 பேரும் இரு யுவதிகளுமாகப் பதினொரு பேர் வெள்ளவாயாவிற்கு சுற்றுலா சென்றிருந்தனர்.

அப்பகுதியில் அலிகெட்டார நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்ற இவர்கள், அந் நீர்வீழ்ச்சி தடாகத்தில் இறங்கிக் குளித்தனர். அவ் வேளையில் அந்த இளைஞன் நீரில் மூழ்கியுள்ளார். ஏனையவர்களின் பாரிய பிரயத்தனத்தினால் இளைஞன் மீட்கப்பட்டு, வெள்ளவாயா அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோதிலும் அவ் இளைஞனை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித்தனர்.

வெள்ளவாயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். ரட்னாயக்க தலைமையிலான குழுவினர் தீவிரபுலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குளிக்கச் சென்ற இளைஞர்களில் சிலர் மதுபோதையிலிருந்தமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மறைசாட்சிகளின் நினைவு விழாவை கொண்டாட மன்னார் ஆயர் அனுமதி!



மன்னார் மறைசாட்சிகள் நினைவு விழாவைக் கொண்டாடுவதற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அனுமதி வழங்கியுள்ளார் என்று மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பின் ஆய்வாளர் எஸ்.அந்தோனிப்பிச்சை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மறைசாட்சிகள் விழா ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தின் வெள்ளிக்கிழமை கொடியேற்றப்பட்டு சனிக்கிழமை காலை திருவிழா திருப்பலியுடன் நிறைவு பெறும்.

வழமை போல் இவ்வருடமும் எதிர் வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதி தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்தில் கொடியேற்றப்பட்டு 18ஆம் திகதி காலை திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுக்க மன்னார் மறைமாவட்ட ஆயர் அனுமதி வழங்கியுள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஆலயங்களில் பின்பற்ற வேண்டிய அரச விதிகளுக்கு அமைய விழா நடத்துவதற்கு ஆயர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் மக்கள் கைகளைக் கழுவி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியைப் பேணி சுமார் 50 பேர் மட்டும் இந்தத் திருவிழாத் திருப்பலியில் கலந்து கொள்ள ஆயர் அனுமதி வழங்கியுள்ளார் - என்றார்.

# இந்திய மீனவரின் எல்லை மீறிய செயற்பாடுகள் தடுத்து நிறுத்த அமைச்சர் டக்ளஸ் வற்புறுத்து

## இந்தியத் தூதரிடம் நேரில் வலியுறுத்தினார்



**கொழும்பு, ஜூன் 25**

**இலங்கை கடற்பரப்பினுள் சட்டவிரோதமாக உள்நுழைகின்ற இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கான இணைந்த பொறிமுறை ஒன்றை உருவாக்கி முன்னகர்த்துவது தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.**

**கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது.**

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்கள் விவகாரத்தினை சுமூகமான முறையில் தீர்த்து வைப்பதற்கான திட்ட முன்வரைவு ஒன்றை இந்தியப் பிரதமரிடம் ஒப்படைத்திருந்தார்.

இந்தத் திட்ட முன்வரைவில் காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்தியத் தரப்பினர் திருப்தி வெளியிட்ட நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான அதிகாரிகள் மட்டத்திலான பேச்சை முதலில் நடத்துவது என்றும், பின்னர் அமைச்சரவை மட்டத்திலான பேச்சுக்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கொறோனா வைரஸ் பரவல் காரணமாக திட்டமிட்டபடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் நேற்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கை கடல் பரப்பினுள் சட்டவிரோதமாநுழைகின்ற இந்திய இழுவைப் படகுகள், இலங்கை கடற்றொழிலாளர்களின் வலைகளை அறுத்துச் சேதமாக்குவதன் மூலம் இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை பாதிக்கச் செய்வதுடன் சட்ட விரோத மீன்பிடி முறைகளை பயன்படுத்தி கடல் வளத்தையும் அழித்துக் கொண்டிருக்கின்றன என எடுத்துரைத்தமையுடன் இந்த விவகாரம் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும் ஏற்கனவே திட்டமிட்டமை போன்று இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்களை காணொலி மூலம் நடத்துவது தற்போதைய சூழலில் நடைமுறைச் சாத்தியமானது என்ற விடயத்தையும் இந்திய உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு கொண்டு கொண்டு வந்திருந்தார்.

அதேவேளை நேற்றைய அமைச்சரவையிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்திய மீனவர்களின் எல்லை மீறிய செயற்பாடுகள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த விவகாரம் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சரவை இலங்கையின் கடல் வளத்தையும் கடற்றொழிலாளர்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் ஏகமனதாக தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## நட்சத்திர விடுதி கட்டுவதற்கு முயன்றவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், அரியாலை, முள்ளி கடற்கரைப் பகுதியில் நட்சத்திர விடுதி ஒன்றை அமைக்க முற்பட்ட ஒருவரை, விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இடத்தில் அநுராதபுர மன்னர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் இருப்பதாக, தொல்பொருள் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர் ஒருவர் அரியாலை முள்ளி பகுதியில் நட்சத்திர விடுதி ஒன்றை அமைக்க சட்டத்தரணி ஊடாக தனது அங்கீகாரம் பெற்றுள்ளார்.

உரிய திணைக்களங்களிடம் இருந்து அனுமதி பெறப்பட்ட நிலையில் தொல்பொருள் திணைக்களம் அனுமதி வழங்கவில்லை.

இந்தநிலையில், நட்சத்திர விடுதி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட இடத்துக்கு நேரில் சென்று ஆராய்ந்த தொல்பொருள் திணைக்களத்தினர், அங்கு மட்பாண்டங்கள் மீட்கப்பட்டன எனவும், அவை அநுராதபுர காலத்து மன்னர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

புராதன சொத்துக்களை பராமரிக்க தவறியதாக தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நட்சத்திர விடுதி அமைக்க அனுமதி கோரியவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தொல்பொருள் திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தனது சட்டத்தரணி ஊடாக நகர்த்தல் பத்திரம் வழங்கி, யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்பாக நேற்று முன்னிலையானார். குறிப்பிட்ட இடத்தில் நட்சத்திர விடுதி அமைக்க வழங்கப்பட்ட அரசாங்க அனுமதிகள் தொடர்பான ஆவணங்களை, குற்றம்சாட்டப்பட்ட நபரின் சட்டத்தரணி மன்றில் சமர்ப்பித்தார்.

எனினும், தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்க முடியாத குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரை நாளை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட யாழ். மாவட்ட நீதிவான் அன்றைய தினம் வழக்காளிகளை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

## கொரோனாத் தொற்று நேற்று இரண்டாயிரத்தை தாண்டியது

கொழும்பு, ஜூன் 25

இலங்கையில் மேலும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2002 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று தொற்று அடையாளம் காணப்பட்டவர்கள் அமெரிக்காவில் இருந்து வருகைதந்தவர்கள் எனசுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றையதினம் மேலும் 14 பேர் பூரணமாகக் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

## நடராஜசிவம் காலமானார்



இலங்கையின் சிரேஷ்ட ஒலி, ஒளி பரப்பாளர்களில் ஒருவரும் சூரியன் வானொலியின் முதலாவது நிகழ்ச்சி முகாமையாளரும் முன்னாள் ஆலோசகருமான சி.நடராஜசிவம், நேற்று இரவு கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார்.

## வாள் மீட்பு; 2பேர் கைது

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் வாள் வைத்திருந்தனர் எனத் தெரிவித்து இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசேட அதிரடிப்படையினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறைப்பகுதியில் நேற்றையதினம் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் வீடொன்றிலிருந்து வாள் ஒன்றை மீட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த வாள் கைப்பற்றப் பட்ட சம்பவத்துடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரையும் மீட்கப்பட்ட வாளையும் இராணுவத்தினர் விசேட அதிரப்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## சட்டவிரோத மணல் அகழ்வு; 3 டிரக்டர்களுடன் ஐவர் கைது



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்குறாணை, மாதுறுஓயா ஆற்றில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 05 பேர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 03 உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாழைச்சேனை விசேட அதிரடிப்படைப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில், கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அக்குறாணை, மாதுறுஓயா ஆற்றுப் பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, வாழைச்சேனை விசேட அதிரடிப்படைப் படையினரால் கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்களுடன் சந்தேக நபர்கள் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனரென, வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

## பிரிந்தவர்களையும்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆதங்கத்தோடு நான் வேலை செய்துகொண்டிருக்கின்றேன்.

மாற்றுத் தலைமை என்று ஜனநாயக ரீதியாக அவர்கள் அப்படிப் பேசலாம், அப்படியான கட்சியாக இயங்கலாம். ஆனால் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் இன்னும் பல மடையவேண்டும்.

மாற்றுத் தலைமை பற்றி நாங்கள் பேசவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் சிறிது சிறிதாக அரச கட்சியில் இருந்தும், சுயேச்சைகளாகவும் எங்கள் வாக்குகளைப் பிரிக்கின்றார்கள். அதற்கு இடமளிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே நாங்கள் வாக்களித்து பலத்தை உண்டாக்கவேண்டும்.

அந்தப் பலத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற செய்யவேண்டும் எனும் கருத்துத்தான் இன்று வரை மிகப் பலமாக இருக்கின்றது. அது வருங்காலத்தில் நாங்கள் மக்கள் மத்தியில் வேலை செய்ய ஆரம்பித்தால் – எங்கள் தேர்தல் அறிக்கையை முன்வைத்துப் பேசினால் – இன்னும் அதிகமாகும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா வைரஸ் மீண்டும் பரவ வாய்ப்பு

## ஜனாதிபதி கோட்டாபய எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 25

கவனக்குறைவாகச் செயற்பட்டால் கொரோனா வைரஸ் மீண்டும் பரவ வாய்ப்புள்ளது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைக்கமைய செயற்படுமாறு பொது மக்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.



# எம்.சி.சி. உடன்படிக்கை குறித்த இறுதி அறிக்கை மஹிந்தவிடம்

## நேற்று நேரில் கையளிப்பு

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் வைத்து குறித்த இறுதி அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டதோடு, அதன் பிரதியானது, பிரதமரின் செயலாளர் காமினி செனரத்திடம் கையளிக்கப்பட்டது.

மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் ஒப்பந்தம் குறித்து ஆராய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குறித்த குழுவானது, 6 மாதங்களாக இத்திட்டம் தொடர்பில் ஆராய்ந்துள்ளது. இதில் பல்வேறு துறைகளிலிருந்தும் கருத்துகள், ஆலோசனைகள் பெறப்பட்டன. அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மிக நீண்ட மீளாய்வு நடவடிக்கையைத் தொடர்ந்து, குறித்த குழுவின் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இறுதி அறிக்கை, இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது. அத்துடன் பிரதமரினால் அமைச்சரவையிலும் இந்த அறிக்கை முன்வைக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்கள பௌத்த தேசியவாதத்தை பரப்புவது நல்லிணக்கத்தை தராது

## தமிழரசுச் செயலர் விசனம்



நாட்டுக்குள் சிங்கள பௌத்த தேசியவாதத்தை ஜனாதிபதி பரப்ப முற்படுவது, நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாதென, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகத்தைப் பேணுவது தொடர்பிலும் நிர்வாகத் துறைகள், இராணுவ மயமாக்கல் தொடர்பிலும் மறுபரிசீலனைகளைச் செய்ய வேண்டுமென்றும், அவர் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு - நல்லையா வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தொடர்ந்துரைத்த அவர், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், அரசாங்கம் தமது பலத்தைக் கூடுதலாகப் பிரயோகிக்கும் என்ற நிலைமை தற்போது உள்ளது. சர்வதேச கண்காணிப்புக் குழுக்களின் மேற்பார்வையிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் அது, ஜனநாயகத் தேர்தலாக இருக்கும். இந்த விடயத்தில் அரசாங்கம் இன்னும் சரியான கரிசனை காட்டவில்லை என்றார்.

நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் உரிமை வழங்கக்கூடிய விதத்தில், நாட்டின் அரசியல் செயற்பாடுகள் அமைய வேண்டும். ஜனாதிபதியும் அவருடைய கட்சியும், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், துரைராசசிங்கம் வலியுறுத்தினார்.

# 'மொட்டு' பக்கம் – 'எடுபிடி கட்சிகள்' ஐ.தே.கவுடன் – 'எடுபடாத கட்சிகள்' சஜித்துடனோ – 'எடுபடும் கட்சிகள்'

## மனோ கணேசன் புது விளக்கம்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வுடன் கூட்டணி வைத்துள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் எடுபிடி வேலை செய்யும் கட்சிகளாகும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் நேற்றுத் தெரிவித்தார்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகள் எடுபடாத கட்சிகளாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், மக்கள் மத்தியில் எடுபடும் கட்சிகளே சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைத்துள்ளன எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

# கட்டணம் செலுத்தாவிடின் மின் துண்டிப்பு

கொழும்பு, ஜூன் 25

கொரோனா நெருக்கடி காலத்தில் மின் கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படாது என்றபோதும், கடந்த ஜனவரி, பெப்ரவரி மாத கொடுப்பனவுகளை செலுத்தாதவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

கொரோனா நெருக்கடி காரணமாக மார்ச், ஏப்ரல், மே மாதக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் இலங்கை மின்சார சபை சலுகை வழங்கியிருந்தது.

எனினும், ஜூன் மாதக் கொடுப்பனவை வழக்கம் போல செலுத்தலாம் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இறுதியாக வழங்கப்பட்ட மின் கட்டணம் சரியானது என்றும், பாவிக்கப்பட்ட மின் அலகுக்கு ஏற்பகவே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், அதிக கட்டணம் வசூலிக்கப்பட்டதாக எந்த வாடிக்கையாளரும் கருதினால், அவருக்குரிய கணக்கிலக்கத்தை சரிபார்த்துக் கொள்ளலாமென்றும், கணக்கீட்டில் தவறிருப்பது நிரூபணமானால் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாமென்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் வறட்சியினால் 2,416 குடும்பங்களுக்கு பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சி பதிவாகியுள்ளதால் 2,416 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்களுக்கான குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சியான நிலை காரணமாக வெலிஓயா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களில் இருந்து அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. வெலிஓயா பிரதேசத்தில் 430 குடும்பங்களை சேர்ந்த 1,540 அங்கத்தவர்களும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1,986 குடும்பங்களை சேர்ந்த 6,398 அங்கத்தவர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெலி ஓயா பிரதேசத்திற்கு மூன்று லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பிரதேச சபை ஊடாக நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச், ஏப்பரல் மாத்தில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேசங்களில் மழைவீழ்ச்சி கிட்டியது. அதனால் அங்கு நீர்ப் பற்றாக்குறை ஏற்படவில்லை என்றும் தொடர்ச்சியாக மேலதிகமான நிதி ஒதுக்கீட்டிற்கு அனர்த்த முகாமைத்து நிவாரணை சேவைகள் நிலையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுகாதார நெறிமுறை வர்த்தமானி வெளியிடப்படாதமையால் சிக்கல்

கொழும்பு, ஜூன் 25

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான சுகாதார நெறிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படாமை குறித்து தேர் தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாமையினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பெரும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தாம் சுகாதார அமைச்சுக்கு கவலை வெளியிடுவதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மேலும் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் தொடர்பான சுகாதார வழிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் கடந்த 22ஆம் திகதி வெளியிடப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2020 இல் வெளியிடப்பெற்றது.




# சித்திரப்போட்டி



படம் 1
டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி




படம் 2
கு. கஜோரிகா - தரம் 5
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'உலங்கு வானூர்தி'**

**நேற்றைய தினம் அதிகளவானமாணவர்கள் 'பனை மரம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத் தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங் களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

சந்திரகுமார் அவிநாஷ் – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பை. ஹண்சிகா – தரம் 4
யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

எம். பிரார்த்தனா – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

எம். யாகவி – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எட்ரியன் லூக் ஜோன் – தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

கி. அஸ்வதா – தரம் 4
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

அஸ்ரிகா பைசர் – ஆரம்ப உயர்தரம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

கி. துஷாந்த் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

ஏ. ஜெசுரன் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

**காலைக்கதிர்** Kalaikathir

**உலங்கு வானூர்தி**

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

**தினம் ஒரு தலைப்பு**



## சித்திரப்போட்டி

**இன்று (25/06/2020) தலைப்பு**
**உலங்கு வானூர்தி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**